பக்கங்கள்: 16    விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02    வள்ளுவர் ஆண்டு 2049    வைகாசி01 செவ்வாய்க்கிழமை 15.05.2018    கதிர் 190

## கொள்ளையனின் கத்திக் குத்தினால் முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 15

கொள்ளையனின் கத்திக் குத்துக்கு இலக்காகிய முதியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்

பக்கம் 14 »

# சர்வதேச அழுத்தம் ஊடாகவே அரசின் கை, கால்கள் இயங்கும்

## இரணைதீவில் தெரிவித்தார் வடக்கு முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 15

“சர்வதேச அழுத்தம் தொடர்ந்தும் இருந்தால்தான் இலங்கை அரசின் கைகள், கால்கள் இயங்கும்.”

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ஜெனீவாவில் ஒப்புக்கொண்டதை அரசு நிறைவேற்றத் தவறியிருந்த நிலையிலும் இரணைதீவு மக்கள் சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் தமது உரித்துக்களைத் தாமே எடுத்துக் கொண்டமையை வடக்கு மாகாண சபை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பக்கம் 14 »



## இரணைதீவில் குடியேற மத்திய அரசுடன் பேச்சு

### வடக்கு முதலமைச்சர் உறுதியளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 15

இரணைதீவுக்குச் சென்றுள்ள மக்கள் அங்கு குடியேறுவதற்கான அனுமதியை மத்திய அரசுடன் பேசி வடக்கு மாகாண சபை விரைவாகப் பெற்றுக் கொடுக்குமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் இரணைதீவு மக்களிடம் உறுதியளித்தார்.

முதலமைச்சர் நேற்று

பக்கம் 03 »

## திலும் அமுனுகம இன்று ரி.ஐ.டியில் முன்னிலையாவார்

கொழும்பு, மே 15

ஒன்றிணைந்த எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர், திலும் அமுனுகமவை, இன்று செவ்வாய்க்கிழமை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில்

பக்கம் 03 »

## இரணைதீவிலேயே வாழ்க்கை இனி எங்கும் போகமாட்டோம்

### அங்குள்ள மக்கள் விடாப்பிடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 15

இரணைதீவு எங்களுடைய மண். இங்கேதான் எங்களுடைய வாழ்வாதாரம் இருக்கிறது. இங்கேதான் நாங்கள் சுதந்திரமாக வாழலாம். எங்களுடைய மண்ணிலிருந்து இனிமேல் நாங்கள் எங்கும் செல்லப்போவதில்லை.

- இவ்வாறு நேற்று உறுதிபடத் தெரிவித்தனர்

பக்கம் 14 »

## போதைப்பொருளை ஒழிக்க சிறப்புப் பொலிஸ் செயலணி

### யாழ்ப்பாணத்தில் அமைப்பு

யாழ்ப்பாணம், மே.15

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தல் - விற்பனையை முற்றாக ஒழிக்க வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்றொஷான் பெர்னாட்டோவால் சிறப்புப் பொலிஸ் செயலணி

பக்கம் 14 »

## வவுனியா சிறையில் கைதி மீது தாக்குதல்!

வவுனியா, மே 15

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் நேற்றுக் காலை கைதி ஒருவர் மீது சிறைக்காவலர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதில் காயமடைந்த

பக்கம் 14 »

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் அவரது மருமகன் அலோஸியஸ் மகேந்திரன் தொடர்பான சர்ச்சைகள் தோண்டத் தோண்டப் பூதம் கிளம்பும் கதையாகத் தொடர்கின்றன.

அர்ஜுன மகேந்திரன் இலங்கை நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்

பக்கம் 03 »

## குற்றச் செயலுக்கு உடந்தை; பொலிஸார் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வாள்வெட்டு வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கும்பல்களுடன் தொடர்பைப் பேணிய பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதி

பக்கம் 14 »

### யாழ்.போதனா வைத்தியசாலை

## வெளிநோயாளர் பிரிவில் கணினி மயச் சேவைகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 15

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் கணினி மயப்படுத்தப்பட்ட சேவைகள் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை

பக்கம் 14 »

## நாகர்கோவில், நவாலியில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 3 ஆம் நாள் நிகழ்வுகள் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பாடசாலை முன்பாகவும், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் முன்பாகவும் நேற்றுத் திங்கட்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன.

1995ஆம் ஆண்டு அரச விமானப் படையின்

பக்கம் 03 »

## வினைத்திறனற்ற அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

### முதலமைச்சரிடம் கோருகிறது மருத்துவர் சங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 15

ஊழல் செய்தனர் எனத் தெரிவித்து அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் வடக்கு மாகாணத்தில் மக்களுக்குச் சேவையாற்றும் நோக்கமற்ற - வினைத்திறனற்ற - அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என இலங்கை அரச மருத்துவ

பக்கம் 14 »

## வைத்திய சேவை நேற்று வடக்கில் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 15

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படாத

பக்கம் 14 »

# மன்னார் நகரில் வெள்ளியன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

மன்னார் மே 15

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் ஒன்பதாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறும்.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர், இந் நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் "ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் சவாலும் வழி வரைபடமும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

தமிழினப் படுகொலையாம் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் நினைவேந்தலில் கலந்து கொண்டு அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்க தார்மீக தமிழின உணர்வுரிமையுடன் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.– என்று ஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மோட்டர் சைக்கிள் மாயம்: பொலிஸ் தீவிர விசாரணை

வவுனியா, மே 15

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்று காணாமற்போயுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வர்த்தக நிலையம் மற்றும் பிரதான வீதி என்பவற்றுக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-100)



# வைத்தியர்கள் புறக்கணிப்பு; வவுனியாவில் மக்கள் அவதி

வவுனியா, மே 15

வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாணம் தழுவிய ரீதியில் நடைபெற்றுவரும் வைத்தியர்களின் பணி பகிஷ்கரிப்பு வவுனியாவிலும் முன்னெடுக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டிலிருந்து வைத்தியர்களுக்கு விகிதாசார அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில், மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பான அரச சுற்றறிக்கைக்கு அமைவாக ஏனைய மாகாணங்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியர்களுக்கான மேலதிக நேரச் சம்பளக் கொடுப்பனவு கடந்த 4 மாதங்களாக வழங்கப்படாததைக் கண்டித்தே வைத்தியர்கள் அடையாளப் பணி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலைகளுக்கு வந்த நோயாளர்கள் பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். (ஐ-100)

# வவுனியா குடும்பநல நிலையத்தில் காத்திருந்த தாய்மார், குழந்தைகள்

## ஆயினும் தடுப்பு மருந்து வரவேயில்லை

வவுனியா, மே 15

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியிலுள்ள தாய் சேய் குடும்ப நல நிலையத்தில் தாய்மார் மற்றும் குழந்தைகள் நீண்டநேரமாக காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நேற்றுக் காலை 7.30 மணியில் இருந்து மதியம் வரை இவ்வாறு தாய்மார் மற்றும் குழந்தைகள் இவ்வாறு காத்திருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள தாய்சேய் குடும்ப நல நிலையத்துக்கு குழந்தைகளுக்கான தடுப்பு மருந்து பெறுவதற்காக தாய்மார்கள், சிறுவர்கள் என 30 இலிருந்து 35 இற்கும் மேற்பட்டோர் சென்றுள்ளனர்.

ஆனால் அந்த நிலையத்திற்குப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தடுப்பு மருந்து எடுத்துச்செல்லப்படவில்லை. இதனால் பல மணி நேரம் காத்திருந்துவிட்டு தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் வீடு திரும்பியுள்ளனர்.



பல கர்ப்பிணித்தாய்மார்கள் தமது பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வந்து வைத்தியர்கள், தடுப்பூசி வராமை காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இது குறித்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, வாகனம் இன்மை காரணமாகவே தாய் சேய் நிலையத்திற்குச் செல்லவில்லை என்று தெரிவித்தார். (ஐ-100)

# முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவுகூர்வது அவசியமாகும்

## ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அறிக்கை

இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வேட்கையையும், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வையும், மனித உரிமைகளையும் மனித நேயத்தையும் மதிக்கும் ஒவ்வொருவரும் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற கொடூர மனிதப் பேரவலத்தை நினைவுகூர்ந்து அஞ்சலிப்பது அவசியமாகும். அந்த வகையில், போரின் இறுதி நாட்களில் குருதி வெள்ளத்தில் மனிதப் படுகொலைக்கு உள்ளாகி உயிர்நீத்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்தகால அரசியல் நிலைப்பாடுகளின் அனுபவங்களில் இருந்து பட்டறிவுடனான பாடங்களைப் பெற்று, மக்களின் விடுதலைக்கான தூரநோக்குடைய மாற்று அரசியல் மார்க்கத்தில் பயணிக்க உறுதியெடுத்துக்கொள்வது காலத்தின் தேவையாகும். இதனைக் கவனத்தில் கொள்ளாது, தமிழ்க் குறுந்தேசியவாதத் தலைமைகள் ஒவ்வொன்றும் தமக்குள் வாக்கு வேட்டைக்கும், பதவிகள் பெற்று ஆதிக்க அரசியலை நீடிக்கவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைப் பயன்படுத்துவது, உயிர்நீத்த மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும்.

கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே இன முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டு பேரினவாத ஒடுக்குமுறையாகவும், கொடிய போராகவும் வளர்த்தெடுக்கப்பட்டது. நியாயமான அரசியல் தீர்வை மறுத்துவந்த பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கம், போர் மூலமான இராணுவத் தீர்வையே நடைமுறைப்படுத்தியது. அதுவே முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைக்கும் காரணமாகியது. இத்தகைய மனிதவதைப் பேரவலத்தை நடத்தி முடிக்க பேரினவாத ஆளும் வர்க்கத்திற்குப் பக்கபலமாகவும், வழிகாட்டியாகவும் இருந்து அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும், இந்திய பிராந்திய மேலாதிக்க சக்தியும் ஏனைய வல்லாதிக்க சக்திகளும் பங்களித்த வரலாற்று உண்மையை எவராலும் மறைத்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாது. ஆனால், துரதிர்ஷ்டம் என்னவென்றால், இன்றைய தமிழ்த் தலைமைகள் அதே அமெரிக்க, ஐரோப்பிய, இந்தியத் தரப்புக்கள் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடனான அரசியல் தீர்வைப் பெற்றுவிட முடியும் என்னும் வீண் நம்பிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் பரப்பி வருவதாகும்.

எனவே, இவ் ஏமாற்று அரசியலுக்கு அப்பாலான, மக்களுக்கான மாற்று அரசியல் பாதையில் பயணிப்பது பற்றித் தூரநோக்குடன் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். எமது அரசியல் தலைவிதியை ஆதிக்க அரசியல் தலைமைகளிடமிருந்து மீட்டு எமது சொந்தக்கரங்களுக்குக் கொண்டுவர இம் முள்ளிவாய்க்கால் நினைவு நாள்களில் தமிழ் மக்கள் முன்வரவேண்டும் என எமது கட்சி கேட்டுக்கொள்கிறது–என்றுள்ளது.

# ஆசிரியர் விடுதி மீது கல் வீச்சு நேற்று மூடப்பட்டது பாடசாலை

## அனலைதீவில் பெற்றோர் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 15

எதுவித முன்னறிவிப்பும் இன்றி முடப்பட்டுள்ள அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் கற்றல் செயற்பாடுகளை உடனடியாக மீள முன்னெடுத்து தமது பிள்ளைகளின் கல்விக்கு உத்தரவாதம் வழங்குமாறு கோரி அனலைதீவு மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.



இந்தப் போராட்டம் நேற்று நடந்தது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது–

சதாசிவ மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி மீது இனந்தெரியாத நபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட கல் வீச்சுத் தாக்குதல் காரணமாக விடுதியில் தங்கியிருந்த ஆசிரியர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து விடுதியை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக நேற்றுப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருகை தராமையால் பாடசாலை மூடப்பட்டது. இதனால் அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் 300 இற்கம் அதிகமான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாயின.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த பாடசாலை மாணவர்களது பெற்றோர் பாடசாலை நிர்வாகத்தினரிடமும் துறைசார் அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறினர். ஆயினும் கற்றல் செயற்பாடுகள் நடைபெறாமையால் ஏமாற்றமடைந்த பெற்றோரும் மாணவர்களும் பாடசாலை உடனடியாகத் திறக்கப்படவேண்டும் எனக் கோரி போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# 19 ஆவது திருத்தத்தை திரும்பப் பெறவேண்டும்

## உதய கம்மன்பில கோரிக்கை



கொழும்பு, மே 15

மக்கள் தாம் விரும்பிய தலைவரைத் தெரிவு செய்வதில் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் பிரச்சினையாக இருப்பதால், அதனை திரும்பப் பெற வேண்டும் என அரசாங்கத்தை கோருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

19வது அரசமைப்புத் திருத்தச் சட்டம் என்ற ஜனநாயக விரோத திருத்தச் சட்டம் காரணமாக விரும்பிய தலைவரைத் தெரிவு செய்ய மக்களுக்கு உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் நாட்டின் தலைவராக வரவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் மக்களே அன்றி அரசமைப்புச்சட்டம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆதரவு இருந்தும் அரசமைப்புச் சட்டத்தின் படி வாய்ப்பு இல்லாத காரணத்தினால், அவர் தேர்தலில் போட்டியிடத் தடை ஏற்பட்டுள்ளது.

இதனால், நாட்டு மக்கள் தாம் விரும்பும் தலைவரிடம் நாட்டை ஒப்படைப்பதற்கு மக்களுக்கு இந்த உரிமையைப் பறித்த 19ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தைத் திரும்பப் பெறுமாறு அரசிடம் யோசனை முன்வைக்கிறோம் – என்றார். (ஐ)

# ரோபோ உதவியுடன் கப்பலில் கிழக்கில் முதல் சத்திர சிகிச்சை

## இலங்கை, அமெரிக்க வைத்தியர்கள் சாதனை

அமெரிக்க மற்றும் இலங்கை சத்திர சிகிச்சை நிபுணர்களால் கடந்த 4ஆம் திகதி ரோபோ உதவியுடனான முதலாவது சத்திர சிகிச்சை யு.எஸ்.என்.எஸ் மேர்சி கப்பலின் தளத்தில் நடத்தப்பட்டது.

இந்த சத்திரசிகிச்சையில் பல்நாட்டு வைத்திய நிபுணர்களாலும் வைத்திய வல்லுனர்களாலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுப் பித்தப்பை அகற்றப்பட்டது.

இலங்கையர் ஒருவருக்கு டாவின்சி ரோபோ சத்திர சிகிச்சை முறையில் (Da Vinci XI Robot Surgical System) இது மேற்கொள்ளபட்டது.

திருப்புமுனையான இந்த சத்திர சிகிச்சையானது கூட்டுறவு, திறன் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் சாத்தியப்பாட்டு எல்லைகளுக்கும் அப்பால் சென்றுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கொப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வைத்திய துறைக்கு முன்னோடியான இந்தச் சாதனையில் இலங்கை மருத்துவ நிபுணர்களுடன் கூட்டுசேர்வதையிட்டு நாம் பெருமையடைகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பலொன்றின் தளத்தில் வைத்துச் சத்திர சிகிச்சையை மேற்கொண்டமை இதுவே எனக்கு முதல் அனுபவமாகும் என மூதூர் ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர். வைரமுத்து வரணிதரன் தெரிவித்தார்.

கடுமையான திட்டமிடல், ஆயத்தப்படுத்தலில் ஒரு முடிவாகவே இந்தச் சத்திர சிகிச்சையானது சுமுகமானதாகவும் வழமையானதொன்றாகவும் அமைந்திருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பசுபிக் பங்காண்மை எனப்படுவது, பசுபிக் பிராந்தியத்தில் வருடாந்தம் நடத்தப்படும் மிகப்பெரிய பல்தரப்பு அனர்த்த பதிலளிப்பு தயார்படுத்தல் நடவடிக்கையாகும். இந்த வருடத்தின் நடவடிக்கையில் இலங்கை, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பெரு மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவ மற்றும் சிவில் உறுப்பினர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டில் – சிங்கப்பூரில் – உள்ளார். மருமகன் அலோஸியஸ் விளக்கமறியலில்.

அர்ஜுன் அலோஸியஸ், பல கம்பனிகளின் உரிமையாளர். அவற்றில் ஒன்று 'மெண்டிஸ் டிஸ்ரிலறிஸ்'. மதுசார விற்பனையுடன் தொடர்புடைய – பல கோடிகள் புரளும் – கம்பனி.

அந்தக் கம்பனியில் இருந்து 190 கோடி ரூபா 108 முக்கிய பிரமுகர்களுக்கு 'பட்டுவாடா' செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அந்த விடயங்களை விசாரித்த புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனராம்.

இவ்விடயம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் இந்தப் பட்டுவாடா விடயமும் மேம்போக்காகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றதாம்.

அந்த 108 பிரமுகர்களின் பட்டியலையும் அம்பலப்படுத்துமாறு – வெளிப்படுத்துமாறு – கம்பனிகளுக்கு இடையிலான ஊழியர்கள் சங்கத்தின் தலைவரும், ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அமைப்பின் தலைவருமான வஸந்த சமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

பிணை முறி தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்டோர் மற்றும் அரசியல்வாதிகளுக்கே மேற்படி 190 கோடி ரூபா பணமும் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

மேற்படி பணத்தைப் பெற்றுக் கொண்டோர் பட்டியல் அம்பலமானால், அர்ஜுன் அலோஸியஸுடன் சிறையில் வாசம் செய்யவேண்டிய பிரமுகர்களின் எண்ணிக்கையும், அவரது மாமனார் அர்ஜுன மகேந்திரன் போன்று வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ வேண்டிய வி.ஐ.பிக்களின் எண்ணிக்கையும் உயரும் என்கின்றன சில விடயமறிந்த வட்டாரங்கள்.

ஊழல் ஒரு தொடர்கதை பாருங்கோ...! -மின்னல்-

### இரணைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைதீவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது தாம் தமது சொந்த நிலத்துக்கு வந்துள்ள நிலையில் தமக்கான அடிப்படை வசதிகளையும் குடியேறுவதற்கான அனுமதியையும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென முதலமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு உறுதிமொழி வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரணைதீவுக்கு வந்து 23 நாள்கள் ஆகியும் குடியேறுவதற்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என்றும் அந்த அனுமதியை வழங்குமாறும் கோரியிருக்கின்றனர். ஆனால் அந்த அனுமதியை வழங்க வேண்டியவர்கள் கொழும்பில் இருக்கின்ற மத்திய அரசுதான். ஆனால் கொழும்பில் இருக்கின்றவர்கள் இந்த இடத்தை மக்களிடம் கொடுப்பதற்குக் காரணங்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

பாதுகாப்புத் தேவைக்கு இந்த இடம் வேண்டும் என்கின்றனர். ஆனால் அவர்கள் இங்கு சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பையே வைத்திருந்தனர் என நாங்கள் அறிகின்றோம். அதற்காக முழு இடத்தையும் வைத்திருக்க வேண்டிய தேவையும் இல்லை. யுத்த காலத்தில் அந்தக் காணிகள் வைத்திருந்தாலும் யுத்தம் முடிவடைந்த பின்னர் அவற்றையும் வைத்திருக்க வேண்டியதில்லை.

அவ்வாறு, கண்காணிப்பு என்றாலும் காணிகளை ஆக்கிரமிக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் அந்தக் கண்காணிப்புக்களை நான்கு சுவருக்குள்ளேயே வைத்தும் செய்யக் கூடிய வசதிகள் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி உங்கள் காணிகளை உங்களுக்கே கொடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோருகின்றோம்.

இவ்வாறு, நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்கின்றபோது உங்கள் காணிகள் உங்களுக்கு மிக விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கை உள்ளது.

இதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமையுடன் தற்போது வடக்கு மாகாணத்திற்கென ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவருடனும் இது குறித்துப் பேச இருக்கின்றோம். எனவே நீங்கள் நம்பிக்கையுடன் இருங்கள். விரைவில் குடியேறுவதற்கான அனுமதி உங்களுக்குக் கிடைக்கும்.. – என்றார். (ஐ-7)

# இரண்டு வருடங்களுக்குள் மூன்று வர்த்தக வலயங்கள்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

ஹம்பாந்தோட்டை வர்த்தக வலயத்துக்கு அப்பால் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் 3 வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பிங்கிரிய, வெலிகம மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் இந்த வர்த்தக வலயங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச முகாமைத்துவ உதவிப் பணியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 4511 பேருக்கான நியமனக் கடிதங்களை நேற்று வழங்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு தொடக்கம் 1992ஆம் ஆண்டு வரை இந்நாட்டிற்குள் 4 வர்த்தக வலயங்களே அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பிரதமர், எதிர்வரும் 2 வருடங்களுக்குள் 3 வர்த்தக வலயங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (ஐ)

# தங்கம் கடத்திய ஒருவர் கட்டுநாயக்காவில் கைது

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தங்கக் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே நேற்று முற்பகல் 11 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து நான்கு தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 24 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

# சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த பொலிஸ் அதிகாரி!

## உடந்தையாக இருந்த தாய் கைது

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சியில் பொலிஸ் அதிகாரி ஒருவரால் சிறுமி ஒருவர் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அதற்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட, சிறுமியின் தாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபரைக் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில்நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு

கட்டுநாயக்க 18ஆம் கட்டை ரயில் கடவையில் ஏற்பட்ட விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி வந்த ரயில் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதால் விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டி நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 49 வயதுடைய பன்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைக் கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ரி.ஐ.டி) முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் கண்டி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காகவே, அவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### நாகர்கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் நாகர்கோவிலில் 22 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மாணவர்களின் உறவுகள் உட்படப் பலர் பங்கேற்றனர்.

நவாலிப் படுகொலையில் உயிர் நீத்த பொதுமக்களுக்கும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு முன்பாக இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி யாழ்ப்பாணம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப்படையினரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 300 பேருக்கு மேல் காயமடைந்தனர். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அறிவார்ந்த அரசியல்வாதியாக தம்மைக் காட்டும் கோட்டாபய

வெறும் இராணுவ் அதிகாரியாகவும், யுத்த வெற்றியாளராகவும் தோற்றப்பாடு கொண்டிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஓர் அரசியல் விற்பன்னராகவும் காட்டும் எத்தனத்தை ஆரம்பித்து விட்டார் போலும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், கூட்டு எதிரணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் களமிறங்கும் திட்டத்தில் முனைப்பாக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ, அதற்காகத் தம்மை யுத்த நடவடிக்கைத் தீவிரப் போக்குடையவர் என்ற தோற்றத்திலிருந்து மாற்றி, தேர்ந்த பொதுநலவாதி எனவும் காட்டும் முயற்சியை ஆரம்பித்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஷங்கிரி லா ஹோட்டலில் அவர் நடத்திய நிகழ்வு இதற்குச் சான்று.

அவரது 'வியத்கம' என்ற அமைப்பு, அவரை முன்னிறுத்தி 'அறிவியல் மிகுந்த இலங்கை – 2030' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கோட்டாபய ராஜபக்ஷ பிரதான உரை நிகழ்த்தினார்.

2030 ஆம் ஆண்டளவில் 'அறிவியல் துறையை நோக்கி இலங்கையை வழிநடத் தல்' தொடர்பில் தனது பார்வையை சுமார் இரண்டாயிரம் பேர் நிறைந்திருந்த அந்தச் சபையில் வெளிப்படுத்தினாராம் கோட்டாபய.

முன்னர்ள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் என உயர் மேட்டுக் குடியினர் மத்தியில் தமது 'அரசியல் பார்வையை' வெளிப்படுத்த முயன்றார் அவர்.

தாம் வெறும் இராணுவ அதிகாரியோ, யுத்தத்தை வழிநடத்தும் யுத்தப் பிரியரோ அல்லர், அதற்கும் அப்பால் நாட்டையும் மக்களையும் நேரிய பாதையில் வழிப்படுத்தும் பார்வையும் தீர்க்கதரிசனமும் கொண்ட அறிவியலாளரும் கூட என்று காட்டுவதற்கு அவர் எடுத்த முயற்சியாகவே இந்த எத்தனத்தை நோக்குகின்றனர் அவதானிகள்.

நாட்டின் ஜனாதிபதி பதவிக்குத் தாம் நிறுத்தவுள்ள வேட்பாளர் வெறுமனே யுத்த நடவடிக்கையில் ஈடுபடும் போர் முழுக்க வாதியல்லர் என்பதைக் காட்டும் கூட்டு எதிரணியினரின் முயற்சியாகவும் இது நோக்கப்படுகின்றது.

இந்த உரையில் யுத்த நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்து, விஸ்தாரமான அறிவுடைய – மேதாவிசாலமுடைய – ஒருவராகத் தன்னை வெளிப்படுத்தும் விதத்தில் உரையாற்றியிருக்கின்றார் கோட்டாபய.

★ அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் தேர்ந்த ஒரு சமூகத்தினால்தான் உயர்ந்த பொருளாதார மேம்பாட்டை எட்ட முடியும்.

★ கொள்கைகள் மாத்திரம் செவ்வனே அமைந்தால் போதாது. அதையும் தாண்டி, அவற்றை விரைந்து செயற்படுத்தும் மக்களும் சமூகமும் மிக முக்கியமானவை.

★ சட்டம், ஒழுங்கு நிலை நிறுத்தப்பட்ட சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியே தேசத்தைக் காப்பாற்றும் திறவு கோல்.

★ இலங்கைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மிக மிக அவசியம்.

★ இலங்கையின் இறைமை மற்றும் கலாசார விழுமியங்களைப் பேணும் அதே சமயத்தில், வெளிநாட்டவர்களையும், சர்வதேச பங்காளர்களையும் திறந்த மனதுடன் இலங்கை வரவேற்று அரவணைக்க வேண்டும்.

★ உயர்மட்ட அரசியல் மற்றும் அரச துறைகளில் உள்ள ஊழல், மோசடிகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் இடையூறு விளைவிக்கின்றன.

★ இனம், மதம், மொழி என்ற பிரிவினைகளைத் தாண்டி நாடு ஒன்றுபட்டு முன் நகர வேண்டும். அதற்கு தேசத்தின் மீதும் தேசியத்தின் மீதும் பற்றும் அபிமானமும் அவசியம்.

– இவ்வாறு தம்மை அறிவார்ந்தவராகவும் தீர்க்கதரிசனமும், மேதாவிலாசமும் கொண்டவராகவும் காட்டுவதற்கு கடும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

சர்வதேச அரசியல், சர்வதேச உறவுகள் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் தாம் அதிகம் பாண்டித்தியமும், அனுபவமும் அறிவும், உணர்வும் கொண்டவராகவும் தம்மைக் காட்டுவதிலும் அவர் விசேட சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை அந்த நீண்ட – அறிவுசார் – உரை பிரதிபலித்தது என்றும் நோக்கர்கள் கூறுகின்றனர்.


வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் பொருத்தமான புத்திஜீவியாக – அல்லது அறிவுசார் வேட்பாளராக – தம்மைக் காட்டுவதற்கு அவர் எடுத்த முயற்சியில் அவர் வெற்றி பெறுவாரா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# கோட்டா தேர்தலில் நிற்பதை தடுக்கப் பலர் தீவிர முயற்சி!

## போர் வீரர்கள் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மே 15

கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கப் பலர் முயற்சித்து வருகின்றனர் எனத் தாய் நாட்டுக்கான போர் வீரர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் கூறுகையில்,

சட்டத்தரணிகளான நாகானந்த கொடித்துவக்கு, சுகந்திகா பெர்னாண்டோ ஆகியோர் அண்மையில் சர்ச்சைக்குரிய சில கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

அடுத்ததாக நாமல் ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பற்றி தேடப் போவதாகக் கூறுகின்றனர். இந்தச் சட்டத்தரணிகள் மூன்று கட்டங்களாகத் தமது சதித்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

கோட்டாபய எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இவர்கள் பங்காளிகள்.

நாமல் ராஜபக்ஷ பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தினார் என்று எந்தக் குற்றச்சாட்டும் இல்லை.

கோட்டாபய மீது மிக் விமான கொள்வனவு தொடர்பான குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. இந்தக் கொடுக்கல், வாங்கல் தொடர்பான தகவலை வெளியிட முயற்சித்த லசந்த விக்கிரமதுங்கவைக் கோட்டாபய கொலை செய்தார் எனக் குற்றம் சுமத்துகின்றனர்.

வெளிநாட்டில் உள்ள உதயங்க வீரதுங்கவுடன் சம்பந்தப்படுத்தி கோட்டாபய பணத்தைக் கொள்ளையிட்டதாகக் குற்றம் சுமத்துகின்றனர். மிக் விமான கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான குழு இருந்தது. அதில் பல அதிகாரிகள் இருந்தனர். எனினும் அவர்கள் பற்றி பேசுவதில்லை.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, கோட்டாபயவுக்கு எதிராக வழக்குகளைத் தொடர்ந்தும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கப் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார். (ஐ)

# மறந்துபோனார் மஹிந்த

## கூறுகிறார் துமிந்த

கொழும்பு, மே 15

தனது ஆட்சிக்காலத்தில் எரிபொருள் விற்பனை செய்யப்பட்ட விலைகளை மறந்து விட்டு தற்போதைய அரசு வறிய மக்களைப் பழிவாங்க எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ கூறுவதாக அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



திருகோணமலை முதலிக்குளம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 2014 ஆம் ஆண்டு காணப்பட்ட விலைகளை விடத் தற்போது எரிபொருள் குறைவான விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு மக்கள் இறந்து பிறந்து விட்டனரா? அவற்றை நாங்கள் மறக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவே தனது ஆட்சிக்காலத்தில் எரிபொருள் விலைகளை அதிகரித்து வறிய மக்களைப் பழிவாங்கினார்.

நாட்டில் உள்ள வங்குரோத்து அரசியல்வாதிகள் காரணமாக புத்திசாலித்தனமாக உரையாடல்களையும் புதிதாக ஒன்றைப் பேசவோ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டை எப்படிதான் சிறந்த இடத்திற்குக் கொண்டு செல்ல முயற்சித்தாலும் அதனை எப்படி தமது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றே பலர் எண்ணுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இப்படி பேசுவது தகுமா?. ஒரு பிரதேச சபை உறுப்பினர் இதனைப் பேசியிருந்தால் பரவாயில்லை. அவரது ஆட்சிக் காலத்தில் எரிபொருள் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டதை அவர் மறந்து விட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவது போல் நாட்டை முன்னேற்ற நாட்டை நேசிப்பவர்கள் அவசியம். சுயநலம் கருதாது, அரசியல் பற்றிச் சிந்திக்காது, நாட்டுக்காகப் பணியாற்றும் நபர்கள் தேவை. இதற்கு கட்சிபேதங்கள் அவசியமில்லை.

நாட்டை நேசிப்பவர்கள் இணைந்தால், நாட்டை முன்னேற்ற முடியும். – என்றார். (ஐ)

# கொலைக் குற்றச்சாட்டில் ஒருவருக்கு நேற்று தூக்கு

கொழும்பு, மே 15

தங்கத்தைக் கொள்ளையிட்டு, ஒருவரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பிரதேசத்தைச் சேர்ந்த மலட் பெர்னாண்டோ என்ற 62 வயதான நபருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இவ்வாறு தூக்குத் தண்டனை விதித்துள்ளார்.

கடந்த 1992ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு வந்திருந்த குற்றவாளி, தனக்கு ஏற்பட்டுள்ள வயிற்று வலியைத் தீர்க்க இளநீர் ஒன்றை மந்திரித்து தருமாறு கூறியுள்ளார். அப்போது ஆலயத்தில் இருந்த தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டுள்ளதுடன் ஆலய பூசகரின் மகனைச் சுட்டுக்கொன்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கடந்த 28 ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணைகளின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இந்தத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றவாளிக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார்.

குற்றவாளிக்கு தூக்குத் தண்டனையுடன் 40 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

16.05.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.ப 10.30 வரை
திதி : பிரதமை பி.ப 4.20 வரை
சுபநேரம் : 4.23 – 5.53 வரை
இராகுகாலம் : 11.53 – 1.23 வரை


# எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு விளக்கம் தருகின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, மே 15

எரிபொருளின் விலைகளைச் சடுதியாக அதிகரித்தமைக்கான காரணத்தை வெளியிட்டிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இலங்கை மின்சார சபையும் ஸ்ரீலங்கன் எயார் நிறுவனமும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு எழாயிரம் கோடி ரூபா தொகையை செலுத்த வேண்டியுள்ளன. இக் காரணத்தால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்தை போக்கும் நோக்கில் மாற்றுவழியை கையாண்டு வருமானம் ஈட்டவே எரிபொருளின் விலைகளை அதிகரித்தோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காலி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகக் காரியாலயங்களுக்கான புதிய கட்டடங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்து உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–


உலக சந்தையில் பெற்றோலின் விலை 41 டொலரினால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பின் நட்டத்தைத் தொடர்ந்தும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் சுமக்க முடி யாது.

அத்துடன் சவுதி அரேபியா எரிபொருளின் விலையை 80 டொலராக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ள போதிலும் அதற்கு ஏனைய நாடுகள் எதிர்ப்பு வெளியிடுகின்றன.

எவ்வாறாயினும் இன்னும் ஒரு வருட காலப்பகுதிக்குள் உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடையும் என நம்புகின்றோம். அப்படி குறையும் போது அந்த சலுகையை மக்களுக்கு வழங்குவதற்கு நானும் ஜனாதிபதியும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்.

2016 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை உலக சந்தையில் எரிபொருளின் விலை பெருமளவில் அதிகரித்தது. இதன்படி 41 டொலரினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் உலக சந்தையின் விலையேற்றத்திற்கு ஏற்ப பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெயின் விலைகளை கடந்த வியாழக்கிழமை முதல் அதிகரித்தது.- என்றார்.

# மின் தடை



உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மாலை மணி வரை -

யாழ் பிரதேசத்தில்-

சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலும்


வவுனியா பிரதேசத்தில் -

தவசிக் குளம் கிராமம், வேப்பங்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# பொருளாதார சரிவை நோக்கி நகர்கின்றது இலங்கை தேசம்

## மல்வத்தை அநுநாயக்கர் மன வேதனை



முறையான வேலைத்திட்டங்களோ முறையான முகாமைத்துவமோ இன்றி தற்போதைய அரசு அல்லற்படுவதுடன் நாடு பொருளாதார சரிவை நோக்கி நகர்வதாக மல்வத்தைப் பிரிவின் அனுநாயக்க தேரர் வண நியங்கொட விஜிதசிரி தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன (தாமரை மொட்டு) கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மல்வத்தை பீடத்திற்குச் சமுகமளித்து நல்லாசி பெற்ற போதே மல்வத்தைப் பிரிவின் அனுநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் , ஸ்ரீ தலதா மாளிகை, கெட்டம்பே ராஜோபவனாராம விகாரையின் விகாராதிபதி வண கெப்பட்டியாகொட சிரிவிமல தேரர், அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கத்தேரர் வண வரகாகொடை ஞானரத்ன தேரர், பதிவாளர் வண மெதகம தம்மாநந்த தேரர் ஆகியோரையும் சந்தித்து நல்லாசிகளைப் பெற்றுக் கொண்டார்.

# கண்டி வன்முறையில் கைதான 35 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 35 பேருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கண்டி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், மஹசோன் பலகாயவின் முக்கியஸ்தர் அமித் வீரசிங்க உட்பட 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களை நேற்று தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்கள் 35 பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மைத்திரி தலைமையில் தனித்து சு.க. அடுத்த அரசை அமைக்கும்

ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது வேறு எந்த அணியுடனோ இணைந்து அடுத்த ஆட்சியை அமைக்கப் போவதில்லை. மாறாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கமே அமைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அரச நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இது குறித்து அவர் மேலும் கூறுகையில் –

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களை வெற்றிகொண்ட தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மாத்திரமே ஜனநாயக ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

தேசிய அரசாங்கத்தில் இருந்து வெளியேறியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 16 உறுப்பினர்களும் வேறு எந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்படப் போவதில்லை. அவர்கள் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்தே தங்கள் தீர்மானங்களை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் எமக்கு உறுதியளித்துள்ளனர்.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளோம் எனக் கூறுகின்றனர். ஆனால் நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழேயே இத்தனை காலமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகின்றோம். ஒரே கொள்கையில் இத்தனை காலமாக செயற்பட்ட காரணத்தினால் தான் மக்கள் எம்மை ஆதரித்து வருகின்றனர்.

ஆகவே, இனியும் அரசியல் இலாபங்களுக்காக நாம் கட்சி மாற வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்படப்போவதில்லை. நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவும் மாட்டோம். அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனும் இணைய மாட்டோம். நாம் இறுதி வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகவே செயற்படுவோம்.- என்றார்.


# உதயங்க வீரதுங்க குறித்து முக்கிய முடிவு நாளை மறுதினத்துக்கு முன் எடுக்கப்படுமாம்

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்கவை டுபாயில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்துவதா இல்லையா என்ற தீர்மானம் எதிர்வரும் 17 ஆம் திகதி (நாளைமறுதினம்) எடுக்கப்படவுள்ளது.

உதயங்க விவகாரத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் சில மேலதிக ஆதாரங்களைக் கோரியுள்ள சூழலில் அந்நாட்டுக்கு தேவையான ஆதாரங்களை வழங்கி படுத்தி பதிலளிக்கும் செயற்பாடுகளை இலங்கை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், 17 ஆம் திகதிக்கு முன்னர் அது நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும், எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது அதனை அண்டிய நாளொன்றில் உதயங்க தொடர்பில் டுபாய் தீர்க்கமான முடிவொன்றுக்கு வரவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

உதயங்க வீரதுங்கவை இலங்கையிடம் கையளிக்க டுபாய் மேலதிகமாக சில தகவல்களை கோரி அண்மையில் இலங்கைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும், அந்தக்கடிதத்தில் டுபாய் கோரியுள்ள விடயங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் மிக் விமான கொள்வனவு தொடர்பிலான விசாரணைக் கோவையை கையாளும் சட்ட மா அதிபர் திணைக்கள குழுவின் உயர் அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனிடையே சர்வதேச பொலிஸாருக்கு மேன் முறையீடொன்றினை சமர்ப்பித்துள்ள உதயங்க, தன்னை இலங்கை அரசியல் காரணிகளுக்காகவே நாடு கடத்தக் கோருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இந் நிலையிலேயே உதயங்க தொடர்பில் மேலதிக சாட்சிகள் கோரப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது.



அதன்படி இலங்கை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் போதிய சான்றுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவரை இலங்கைக்கு நாடு கடத்த டுபாய் நடவடிக்கை எடுக்கும் எனவும் போதிய சாட்சிகள் இல்லாமல் இருப்பின் அவர் டுபாய்க்கு எங்கிருந்து வந்தாரோ அந்த நாட்டுக்கே கடத்தப்படுவார் எனவும் அறிய முடிகிறது.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி, உதயங்க வீரதுங்க சர்வதேச பொலிஸாரின் சிவப்பு அறிவித்தலுக்கு அமைய டுபாய் பொலிஸாரால் அஜ்மான் நகரில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து அவரை இலங்கையிடம் கையளிக்குமாறு இலங்கை டுபாய் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தது.

2006 ஆம் ஆண்டில், மிக் - 27 ரக விமான கொள்வனவின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் 14 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி தொடர்பில் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபராக கருதி உதயங்க வீரதுங்க தேடப்பட்டு வருகின்றமையும் அது குறித்த வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணையில் உள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# வைகாசி விசாகப் பொங்கல் விழா

தெல்லிப்பழை, மே 15

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், பழைமை வாய்ந்ததுமான மயிலிட்டி வடக்கு தேவியாலயகொல்லை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் விழா சுமார் 28 வருடங்களின் பின்னர் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது.

இப் பெரும் பொங்கல் விழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி அடுத்து வரும் திங்கட்கிழமை 28 ஆம் திகதி பொங்கல் நடைபெறும். அன்றைய தினம் அதிகாலை வளந்து வைத்தலுடன் பொங்கல் ஆரம்பித்து காலை 6 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம் பெற்று அன்னதானமும் இடம் பெறும். (இ)

# ஹமீடியாஸ் களஞ்சியசாலை தீப்பரவல் மர்மம் நீடிக்கிறது

## இரசாயனப் பகுப்பாய்வு உதவி கோரப்படுகிறதாம்



அண்மையில் ஹமீடியாஸ் நிறுவனத்தின் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ பரவலான சம்பவம் விபத்தா அல்லது நாசகார நடவடிக்கையா என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் வெளிப்படுத்தப் படாத நிலையில், தீ பரவலுக்கான காரணத்தை கண்டறிய அரச இரசாயன பகுப்பாய்வாளரின் உதவியைப் பொலிஸார் நாடியுள்ளனர்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரத்மலானை–பொருப்பன பகுதியில் உள்ள பிரபல ஆடையகமான ஹமீடியாஸ் நிறுவனத்தின் களஞ்சிய சாலையில் பரவிய பெரிய தீ விபத்தை ஒன்பது மணி நேர போராடத்துக்கு பின்னர் கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தொழிற்சாலையில் களஞ்சியசாலையிலேயே இந்த தீ விபத்து இடம்பெற்று திடீரென தீ பரவ ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து களஞ்சியசாலையில் பணி புரியும் ஊழியர்கள் அவ்விடத்தை விட்டு விரைவாக வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்துத் தகவல் தீயணைப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு தெஹிவளை–கல்கிஸை மாநகர தீயணைப்பு படையினரும் அதற்கு மேலதிகமாக கொழும்பு, கோட்டே, மொரட்டுவ மற்றும் இரத்மலானை விமான நிலைய தீயணைப்பு படையினரும் விமானப்படையினர் உள்ளிட்ட முப்படையினரும் பொலிஸாரும் விரைந்து வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந் நிலையிலேயே சனிக்கிழமை இரவு 10.30 மணியான பின் தீ பரவலை முற்றாக கட்டுப்பட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

# தினசரி ராசி பலன் (15.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித்திங்கள் 1 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அமாவாசைத்திதி மாலை 5.17 மணி வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம்: பரணி பகல் 10.56 மணி வரை பின்னர் கார்த்திகை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.14 மணி முதல் 4.48 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.22 மணி முதல் 11.52 மணி வரை.

இன்று கார்த்திகை விரதமும் அமாவாசை விரதமும்.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - இன்று திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழியாடு** - பரணி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** – நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். திருமண சுப முயற்சிகளில் வெற்றி ஏற்படும். விட்டுப் பிரிந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**ரிஷபம்** – சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் எவ்வளவு தான் பாடுபட்டாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. தேவையற்ற சிக்கல்கள் தோன்றும்.

**மிதுனம்** – உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் உண்டாகும். பிரிந்த உறவுகள் ஒன்று சேர்வதால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத் தொழில் சுறுசுறுப்பாக நடக்கும்.

**கடகம்** – சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். பதவி உயர்வுகள் வேலைப் பளு அதிகரிக்கும். எந்த வேலையையும் சிரமப்பட்டே முடிக்க வேண்டி வரும். வியாபாரம் சுமாரான லாபத்தைத் தரும்.

**சிம்மம்** – நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும். சகோதர வழியால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும்.

**கன்னி** – சஞ்சலம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்ப வாழ்வில் ஒற்றுமை குறையும். தொழிலில் மந்த நிலை காணப்படும். திருமணப் பேச்சு வார்த்தைகள் குழப்ப நிலையில் இருக்கும்.

**துலாம்** – மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். சுய தொழிலில் ஆதாயம் குறையும். வெளிநாட்டுப் பண முயற்சி இழுபறியில் இருக்கும்.

**விருச்சிகம்** – ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை அடையலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள்.

**தனுசு** – கீர்த்தியான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப நிலையில் ஒற்றுமை நீடிக்கும். மாணவர்கள் கல்வித் திறமையால் அனைவரின் பாராட்டைப் பெறுவார்கள். சகோதர உறவு வலுவடையும்.

**மகரம்** – யோசனையான நாள். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். தொழில் ரீதியான போட்டி, பொறாமைகள் அதிகரிக்கும். நண்பர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்** – சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் சுமை ஏறும். வியாபாரம் ஏறு, இறங்குமுகமாக நடக்கும். உத்தியோகத்தில் உயர்வுகள் கிடைக்கத் தாமதமாகும்.

**மீனம்** – சுபீட்சமான நாள். தன லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்து சுபீட்சம் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டாகும். திருமண காரியம் ஒப்பேறும்.

சந்திராஷ்டம நாள்: உத்தரம் 2 ஆம், 3 ஆம், 4ஆம் பாதம்.பூசம், அத்தம், சித்திரை 1ஆம், 2 ஆம் பாதங்களில் ஆகிய பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# 1980 ஹெக்டேயரில் பயிர்ச் செய்கை குடா நாட்டில் வறட்சியால் பாதிப்பு



வறட்சியின் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வெங்காயம் உட்பட்ட 1980 ஹெக்டேயர் பயிர்ச்செய்கை பரப்பு முற்றாக அழிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இளவாலை, மாதகல் மற்றும் உரும்பராய் பகுதிகளில் வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள் ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வறட்சியால் தமது பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தம்மால் பெறப்பட்ட வங்கிக்கடன்களை செலுத்துவதற்கு நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறு இந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள் ளன.

விவசாயிகள் இந்த விளை நிலங்களில், கடந்த வருடம் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதனர் எனவும் உரிய காலத்தில் விதை உருளைக் கிழங்குகள் கிடைக்காமை காரணமாக இந்த வருடம் அவர்கள் மாற்றுப் பயிர்ச் செய்கையாக வெங்காயத்தைப் பயிரிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சம்பந்தர் குருபூசை தின திருமுறை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், மே 15

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவ சமய அறிவை விருத்திசெய்யும் பொருட்டு, திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும், தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது. பாலர் பிரிவுக்கு 'தோடுடைய செவியன்', "மந்திரமாவது நீறு" ஆகிய இரு திருமுறைகளும் –

கீழ் பிரிவுக்கு "வாழ்க அந்தணர்", "மானினேர்விழி மாதராய்விழி" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறைமனனப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் பி.ப 2.30 மணிக்குநடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 18 ஆம் திகதியாகும். போட்டிக் கட்டணம் ரூபா 80. பரிசில்கள் எதிர்வரும் மே 31 ஆம் திகதி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை தினமன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப்பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும், பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)

# ஆலய உற்சவங்கள்

புத்தூர், மே 15

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழா 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இரத அவரோகணம் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலாவரை புனித தீர்த்தக் கேணியில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வைரவர் குளிர்த்தி அபிஷேகம் இடம்பெறும்.

★★★

கோப்பாய், மே 15

கோப்பாய் வடக்கு வட கோவையம் பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் ஆலய மகோற்சவம் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

★★★

சாவகச்சேரி, மே.15

சாவகச்சேரி சப்பச்சி மாவடி பிள்ளையார் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

# இறந்தவர்களின் கண்ணீரில் பங்கு லாபம் தேடாதீர்கள்!

## மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் விவரிப்பு

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சர்ச்சை தொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் நேற்று வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அது முழுமையாக இங்கு பிரசுரமாகின்றது.**

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு என்பது இந்த நூற்றாண்டில் இடம் பெற்ற மிகப் பெரிய திட்டமிட்ட மனித இனப்படுகொலை ஆகும்.

உறவுகளை இழந்தவர்களை நெருக்கடியின்றி இயல்பாக அழுவதற்கு வழிவகுக்க வேண்டியதே எமது தார்மீக கடமை. அதை விடுத்து மரணவீட்டு அரசியல் செய்வது மனித நாகரிகத்திற்கு உவப்பானது அல்ல. இதை இரண்டு தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் தமிழ்த்தேசிய அடிப்படை வாதத்தில் இருந்து உருவெடுக்கா விட்டாலும் எமது மக்களின் இன்றைய அவலத்தை புரிந்து கொண்டு எவருக்கும் அஞ்சாமல் உள்ளதை உள்ளபடி விடுதலை அரசியலுக்கு இறுமாப்புடன் வீரியமிடுகிறீர்கள். அதனால்தான் பெரும்பாலான தமிழ் மக்களினால் நேசிக்கப்படுகின்ற நம்பிக்கைக்குரிய ஒருவராக திகழ்கிறீர்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் இன்று உங்களைச் சுற்றியே வட்டமிடுகின்றது. கூட்டமைப்பை கொழும்பு குத்தகைக்கு எடுத்துவிட்டது. அவர்கள் சிங்கள தேசச் சிந்தனையுடன் கனவுலகில் வாழ்கிறார்கள். ஆகவே தமிழர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றவேண்டிய தார்மீகப் பெரும் பொறுப்பு தங்களுக்கு உண்டு என்பதை தாங்கள் புறந்தள்ள முடியாது.

இன அழிப்பு நினைவேந்தலை ஒருங்கிணைந்து செயலாற்ற முடியாமல் எதிரி சிரிக்குமளவிற்கு பலருடைய நிகழ்ச்சி நிரல்கள் வேலை செய்கின்றமையைத் தாங்கள் அறியாமல் இல்லை. மாணவர்களுடைய கோரிக்கையும் முழுமையாக ஏற்புடையதன்று. அவர்களுக்குப் பின்னும் பல்வேறு விதமான சூழ்ச்சிகள் உண்டு என்பதுடன் சில அரசியல்வாதிகளும் வழி நடத்துகிறார்கள் என்பதும் வெள்ளிடைமலையானது.

ஆனால், மாகாண சபையிலும் பல்வேறு விதமான குறைபாடு உண்டு. அதற்கு உங்களைத் தனியே குற்றம் சொல்லமுடியாது. தமிழரசுக்கட்சி உங்களைச் செயற்படவிடவில்லை. பல்வேறு விதமான நெருக்கடி தந்ததுடன் உங்கள் மாணவன் சுமந்திரன் மாகாண சபையில் உள்ள தனது அடிவருடிகளைக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தி, தங்களை மனோ நிலை ரீதியாகச் சங்கடப்படுத்துகிறார்கள் என்பது உலகறிந்த உண்மை.

அபிவிருத்தி வேலையை விட விடுதலை அரசியலுக்குரிய பணிகள் அதிகம் காணப்பட்டன. அரசியல் மயப்படுத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலையை அரசியல் நீக்கம் இன்றி முன்னெடுப்பது சிரமமாகக் காணப்படும.

01. வடகிழக்கு ரீதியாக பொது அமைப்பு பிரதிநிதிகளை உள்ளடக்கி வலுவான செயற்பாட்டு அமைப்பை உருவாக்கி இருக்கலாம். அவ்வாறே உருவாக்கி இருந்தால் இந்த திடீர் தேசியவாதிகளின் குழப்பம் உருவாகி இருக்காது.

02. நினைவுத்தூபி அமைப்பதற்கு ஒருகுழு அமைத்தீர்கள். ஆனால் இயங்கவில்லை.

03. முள்ளிவாய்க்காலில் இதுவரை காணி அடையாளமிட்டு வரையறுத்து ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

04. இப்போது மக்கள் பிரதிநிதிகளுக்கு தான் உரிமை உண்டு என்கிறீர்கள் ஒரு மாகாணசபை உறுப்பினர் வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபா வழங்கியிருந்தால் இரண்டுகோடி ரூபா தேறி இருக்கும். தூபி அமைத்து இருக்கலாம்.

05. ஐந்து வருடத்தில் நீங்கள் எல்லோரும் அதிகம் செய்தவை மாலைகளுடன் வலம் வந்ததும் எந்த தாக்கமும் செலுத்தாத பயனற்ற செயற்படுத்த முடியாத தீர்மானங்களை அடுக்கடுக்காக ஏட்டிக்குப் போட்டியாக மாகாண சபையில் நிறைவேற்றியதும் ஆளும் கட்சிக்குள் எதிர்க்கட்சியாக செயற்பட்டதும் தான்.

06. இன அழிப்பு என மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றியது போல் இனப்படுகொலைக்கு ஒரு தனியான விசாரணை ஆணைக்குழுவை நியமித்து உண்மையைக் கண்டறிந்திருக்கலாம். குறிப்பாக, எத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டார்கள், காணாமற்போனவர்கள் எத்தனை பேர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் படைத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் அநாதைகள், அங்கவீனர்கள், விதவைகள், தடுதாரர்கள், இழந்த சொத்து மதிப்பீடு போன்றவற்றை சுயாதீனமாக உறுதிப்படுத்தி இருக்கலாம்.

அத்துடன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களின் புள்ளி விவரப்படி உலக உணவுத்திட்டத்தின் விவரப்படி 146,679 பேர் கொல்லப்பட்டோ, காணாமல் போயோ உள்ளனர் என்பதை ஆராய்ந்திருக்கலாம் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு பரணகம ஆணைக்குழு போன்றவற்றின் புள்ளிவிவரங்கள் தவறானவை என்பதை நிரூபித்திருக்கலாம். இந்தத் தகவல்களை சர்வதேச சமூகத்திற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்திற்கும் சமர்ப்பித்திருக்கலாம். செய்தீர்களா?

07. படைத்தரப்பாலும், அரசாங்கத்தாலும் அபகரிக்கப்பட்ட தனியார், அரச காணிகள் தொடர்பான விவரங்கள் ஒழுங்குமுறையாக சேகரித்திருக்கலாம்.

08. பௌத்த விகாரைகள் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள், படைத்தரப்பு முகாம்கள் போன்ற தகவல்களைச் சேகரித்திருக்கலாம்.

இவற்றை எல்லாம் விட்டுவிட்டு இறந்தவர்களின் கண்ணீரில் எல்லோரும் பங்குலாபம் தேடுகிறீர்கள. எட்டு ஆண்டுகளுக்கு பின்னர்தான் மாணவர்களுக்கு முள்ளிவாய்க்கால் ஞாபகம் வந்தது. இது மாணவர்களுடன் மட்டுப்படுத்தும் அளவிற்கு சாதாரண படுகொலை அல்ல அவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இதில் உடன்பாடு இல்லை என அறிகின்றோம்.

தயவு செய்து எல்லோரும் சேர்ந்து எம்மை குழப்பாதீர்கள் இழந்த உறவுகளைத் தவிர உங்கள் ஒருவருக்கும் இது சொந்தம் இல்லை. அவலச்சாவுக்கு உட்பட்ட ஆன்மாக்கள் உங்கள் ஒருவரையும் மன்னிக்காது.

ஆகவே, மாகாண சபையின் ஆட்சிக்காலம் நிறைவுறப்போகிறது. மேலே குறிப்பிட்ட விடயங்களை இயலளவிலாவது நிறைவேற்ற முயலுங்கள் என கேட்டுக்கொள்கின்றோம்.

காற்று இடைவெளிகளை நிரப்பும் என்பதை எல்லோரும் நினைவில் கொள்ளுங்கள்.


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -14, ஸ்ரான்லி வீதி, ஆதன இலக்கம் 517/8 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பிலிப்பு பெண் மரியம்மா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை கரையூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பு சீனி என்பவர் தனது மகள், பிலிப்பு பெண் மரியம்மாவிற்கு சீதனமாக பிரசித்த நொத்தாரிசு ஜோ.பற்றிக் முகதாவில் 1945.05.15 ஆம் திகதியிட்டு 239 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் நிறைவேறிய 9696 இலக்க 2006.09.23 ஆம் திகதிய நன்கொடை உறுதியில் திரவியம் பிலிப் வெனிற்றா ரஞ்சனி மேற்குறித்த ஆதனம் தனது மாதா வழி முதுசமென வெளிப்படுத்தி சூசைதாசன் ஜெனிற்றா கமிலஸிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு A.M. திருவாதவூரன் முகதாவில் 2013.10.08 ஆம் திகதியிட்டு 2296 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் சூசைதாசன் ஜெனிற் கமிலஸ், இராஜதுரை சந்திரசேகரத்துக்கு மேற்குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம்:- வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவில்பற்று கரையூர் இறை 'இக்கிரித் தோட்டம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ரி.சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இலக்கம் 5768/2013.07.05 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.01 குளி 08.75 ஆகும். இதற்கு எல்லை,

**கிழக்கு:- திருச்செல்வம் ஆரோக்கியத்தின் ஆதனம்**
**வடக்கு:- மணியம் சுந்தையாவின் ஆதனம்**
**தெற்கு:- தனியார் பாதை.**
**மேற்கு:- சூசைதாசன் ஜவின் தாவீன் ஆதனம்.**

தற்போது இவ்வாதனம் இராஜதுரை சந்திரசேகரா என்பவரது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது இராஜதுரை சந்திரசேகரா என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## DISTRICT SECRETARIAT, JAFFNA

### ADDENDA OF INVITATION FOR BIDSPUBLISHED ON 06.05.2018

Supplements to the above mentioned IFB are as follows:

1.If the Grade of ICTAD mentioned in the IFB was not received or not substantially responsive, the next grades will be considered in turn (ie. if one grade is not received or not acceptable, the next grade will be considered and if this grade is also not received or not acceptable then the next grade will be considered. In this order other grades will be considered )

2. In clause 5 of IFB, date and time to purchase bid documents are changed until 28.05.2018 from, 9.00 a.m to 2.00 p.m.

3. In clause 6 of IFB, date and time to send sealed bids are changed on or before 2.30 p.m on 30.05.2018. Bids will be opened at 2.30 p.m at same day.

Nagalingam Vetharayahan
District Secretary,
District Secretariat,
Jaffna.

# முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நில மீட்பு போராளிகளுடன் இரணைதீவில்









வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் இரணைதீவு மக்களை நேற்று திங்கட்கிழமை சென்று சந்தித்து உரையாடினர்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த நிலத்திற்கு செல்ல வேண்டும்என வலியுறுத்தி கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் 359 ஆவது நாள் வரை எந்தத் தீர்வும் இன்றி தொடர்ந்த நிலையில் பொறுமையிழந்த மக்கள் தாங்களாகவே தங்களின் சொந்த நிலமான இரணைதீவுக்குச் சென்று குடியேறினர்.

இதனை தொடர்ந்து பல அரசியல்வாதிகளும் நிலமீட்புப் போராளிகளாக விளங்கிய இரணைதீவு மக்களைச் சென்று பார்வையிட்டு வந்த நிலையில் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ் வரன் மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், முன்னாள் வடக்கு விவசாய அமைச்சர் பொ. ஜங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் உள்ளிட்டவர்கள் சென்று மக்களைச் சந்தித்துள்ளனர்

1992 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இரணைதீவில் இருந்து வெளியேறிய மக்கள் இரணைமாதாநகர் கிராமத்தில் வசித்து வந்தனர். இவர்கள் தங்களின் பூர்வீக நிலத்தை விட்டு வெளியேறிய நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் நெருக்கடிக்குள் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி சொந்த நிலத்திற்கு செல்வதற்கான போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த போராட்டத்திற்கு எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் அந்த மக்கள் தாங்களாகவே தங்களின் நிலத்திற்குச் சென்று நெருக்கடிகளுக்கு மத்தியில் குடியேறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ

# கனடா 'வாழ வைப்போம்' அமைப்பினரால் இரணைதீவிலுள்ள மக்களுக்கு கிடுகுகள்





நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் ஒழுங்கமைப்பில் கனடா வாழவைப்போம் அமைப்பினர் இரணைதீவு மக்களுக்கு தற்காலிகக் கொட்டகை அமைப்பதற்காக இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கிடுகுகளை வழங்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் மக்கள் வேண்டிக் கொண்டதற்கு அமைய அந்த அமைப்பு இவ்வுதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் இரணைமாத நகரில் இடம்பெற்றது. இங்கு குறித்த கிடுகுகளை மக்களின் மீள் குடியேற்றத்துக்கு பொறுப்பான பிரதிநிதிகளிடம் பூநகரி பிரதேச சபை உறுப்பினர் ஜெயகாந்தன் வழங்கினார் .

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், பூநகரி பிரதேச உப தவிசாளர் ஸ்ரீரஞ்சன், பிரதேச சபை உறுப்பினர்களான எமிலியாம்பிள்ளை, வீரவாகு தேவர் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையும் இணைந்து பளை பிரதேசத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தியுள்ளனர். பளை இத்தாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைவர் சு.சுரேன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வருமானம் குறைந்த மக்கள் பல[illegible] பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ

காலைக்கதிர்
Kalaikkathir



# இன்றும் 'குமுதினி' மௌனப் பயணம்

## எம்மவர்கள் 36 பேர் குதறப்பட்ட சோகத்தில்

கோபாலு பத்மநாதன் நெடுந்தீவு



'குமுதினி' யில் பயணித்த எம்மவர்களில் கர்ப்பிணித்தாய் உட்பட 36 பேரை சீருடை தரித்த கயவர்கள் கத்தி, கோடரியால் வெட்டி, கொத்திக் குதறிய கோரம், கொடூரம் நிகழ்ந்து இன்றுடன் 33 வருடங்கள் நிறைவடைகின்றன. எனினும் எங்கள் 'குமுதினித் தாய்' அந்தத் துயரம், சோகங்களுடன் இன்றும் – வயது எண்பதைக் கடந்தும் – சேவையைத் தொடர்கின்றாள்.

நெடுந்தீவு... யாழ் குடாவின் நிலப்பரப்பிலிருந்து நீண்ட தூரத்தே நீண்ட பெரும் பரப்பாய் நிமிர்ந்து நிற்பது நெடுந்தீவு. ஆழக்கடலின் அதிகாரத் தோரணைகளுக்கும் இயற்கையின் இறுமாப்புக்களுக்கும் இசைந்து போகா மல் தனக்கே உரித்தான கம்பீரத்துடன் கல்வேலிகள் பனை, தென்னை, பூவரசு, ஈச்சமரங்கள் எல்லாம் அழகு செய்ய நாற்புறமும் காவற் தெய்வங்களின் கண்காணிப்புடன் பிரவகித்து நிற்கிறது அது.

நீண்ட கடல்வெளியால் பிரிக்கப்பட்டு பயணத்திற்காக படகுகளை நம்பி காத்துக் கிடப்பினும் எம்மவரின் சிந்தனைகளும் செயல்வடிவங்களும் ஓங்கி ஒலித்தபடி என்றும் இருக்கும். ஆழிப் பேரலையால் கூட அசைக்க முடியாமற் போன எம் சொந்தங்கள் மீது 1985 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி இல் மிகப் பெரிய வரலாற்றுக்கொடுமை நிகழ்த்தப்பட்டது. நெடுந்தீவின் குடிமக்கள் மட்டுமன்றி உலகமே உறைந்துபோனது. அன்றைய விடுதலை வேட்கை வீறு கொண்டு வியாபித்து வளர வழிவகுத்த வரலாற்றுச் சம்பவமாகவும் அது அமைந்தது.

### வழமையான பயணம்

அரச பணியாளர்கள், பெரியவர்கள், வியாபாரிகள், குழந்தைகள், பெண்கள் என அறுபதிற்கும் மேற்பட்டோர் நாளாந்த கடமைகளின் பொருட்டு அன்றும் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். கடலன்னைத் தாலாட்ட குமுதினியாள் நீரைக் கிழித்து அசைந்தாடிச் செல்லும் அந்த



ஒரு மணித்தியாலமும் இன்பம் தரும் பயணம் தான். திரும்பி வரும்போது மட்டும் வைகாசி, ஆனி, மாதங்களில் சிறு அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதாகியிருக்கும். ஆனந்தமாகப் புறப்பட்ட குமுதினிக்கும் பயணிகளுக்கும் இடைக்கடலில் 'இடி' விழுமென யார் தான் எண்ணியிருப்பர்.

படகு நிறுத்தப்பட்டது. சிறிய படகில்



வந்தவர்கள் குமுதினியில் ஏறிக்கொள்ள வழமையான வெருட்டும் – அச்சுறுத்தலும் செயற்பாடு என எண்ணியவர்களாய் பயணிகள் படகினுள் பரிதவித்தனர். சோதனையிட வேண்டும் எனக் கூறி எல்லோரையும் பின்பக்க அறைக்குள் (Compartment) அனுப்பி விட்டு பின்னர் முன் அறைக்குள் ஒவ்வொருவராய் வரவழைக்கப்பட்டு கத்தி, கோடரி, கொட்டன்கள் என்பவற்றால் வெட்டியும், கொத்தியும் சித்திரவதை செய்து குருதிதோய சரிந்தமை கடந்து போனவை.

கடமையே கண்ணென வாழ்ந்து காட்டிய அதிபர் திருமதி புஷ்பராணி வேலுப்பிள்ளை, ஆசிரியர் க.சதாசிவம் 'குமுதினி'யின் பிரதானி தேவசகாயம்பிள்ளை, இ.போ.ச. ஊழியர்களான ந.கந்தையா, ச.கோவிந்தன் மற்றும் க.கார்த்திகேசு என பல அரச உத்தியோகத்தர்களுடன் பெரியவர்கள், குழந்தைகள் கர்ப்பிணிப் பெண் உட்பட ஈவிரக்கமின்றி யாவரும் குதறப்பட்டனர். இரத்த வெள்ளத்தில் தத்தளித்த இவர்களில் முப்பத்தாறு பேர் கொலை வெறிக்கு இரையாகினர். ஏனையவர்கள் உயிர் தப்பினாலும் நீண்டகால நோயாளிகளாகவே அவர்களால் வாழ முடிந்தது.

இனவாத அரசியலின் கோரமும், கோழைத்தனமும் வெளிப்படுத்தப்பட்ட இச்சம்பவம் தமிழ் இன விடியலுக்காக இளைஞர்களை வீறுகொள்ள வைத்த வரலாற்றுத் தடங்களில் முதன்மையானது எனலாம். சுமுகமான ஒரு சூழ்நிலை நிலவும்போது குடும்ப உறவுகளோடு இணைந்திருக்க வேண்டியவர்கள் இன்று இல்லை என்பதை எண்ணிப்பார்க்கையில் இது எத்தனை கொடுமையானது என்பது புரியும்.

வெட்டுவதும் கொத்துவதும் வேரோடு சாய்ப்பதுவும் இனவாத சக்திகளுக்கு இது புதியதல்ல குமுதினியில் மட்டுமல்ல குருநகரிலும் இதே கொடுமை நிகழ்ந்தது.

### கவிஞர் கண்ணில் குமுதினி...

சமகால கவிஞர்களால் குமுதினிப் படுகொலை கவிவரிகளில் வெளிவந்தன. கவிஞர் புதுவை ரத்தினதுரை அவர்கள் "குமுனிதிப் படகில் யார் வெட்டினார்கள்... குருநகர் கடலில் ஏன் கொத்தினார்கள்... என்றும் நயினைக் கவி



குலத்தின் "கார்த்திகேசு என்னவானான்..." என்று நீளும் கவி அவலமும் ??? வெட்டி எறிந்த குருதிக்காட்டில் எது பூக்கும்?

– என்ற ஏக்கமும் என்றும் எம் தீவு மக்களின் நாடித்துடிப்பின் அடையாளங்களால் நீண்டு செல்லும்.

### திருப்பு முனை நோக்கி...

செல்லரித்துப் போன தேச கட்டுமானங்களில் எம்மவரின் இழப்புக்கள் நிலையானவை. இனவாத அரசுகளை ஆட்டங்காண வைத்த, வரலாற்றுப் பதிவுகளில் ஒரு முக்கிய திருப்பு முனை. ஈழ விடுதலை வரலாற்றில் என்றும் ஈரம் காயாத வரிகளாய் நிலைத்து நிற்பது குமுதினி படுகொலை.

அன்று அரச படைகளின் கோரத் தாண்டவத்தால் குதறப்பட்டோரை ஒன்றுபட்ட "இளைஞர் அணிகளும்" பொது மக்களும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டமையால் அநேகமானோர் காப்பாற்றப்பட்டனர்.

### நினைவு தினமும் நினைவாலயமும்

இறந்தோரின் நினைவாக சமய வழிபாடுகளுடன் ஊர்வலங்களும் நினைவுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. "இளம் பறவைகள் கலாமன்றம்" எனும் அமைப்பு நினைவாலயம் அமைப்பதற்கான முதல் முயற்சியை செய்திருந்தது. காலப்போக்கில் பிரஜைகள் குழு, பிரதேச சபை போன்றவை தற்போதைய நினைவாலயம் வரையான ஆக்கபூர்வ பணிகளை மேற்கொண்டிருந்தன எனலாம்.

முப்பத்திமூன்று (33) வருடங்கள் நிறைவடையும் இன்றைய நாள் வரை பேசுபொருளாகவே குமுதினி அமைந்திருக்கின்றது.

### குமுதினியின் சேவையும், தேவையும்

குமுதினிப்படகு இற்றைக்கு சுமார் எண்பது வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இன்று வரை அது சேவை செய்து வருகின்றது. இடையில் பழுதானால் பத்திரிகைகள் சோக கீதம் பாடுவதைக் கேட்கலாம். அத்தனை முக்கியத்துவம் குமுதினிக்கு உண்டு.

காற்றும் மழையும் வெயிலும் கடும்
மழையும்
ஏற்று எமைச் சுமக்கும் குமுதினித்தாய்
கூற்றுவரின் கூட்டக்
கொடுங் கத்தி வாள்முனையில்
வீழ்ந்தாள் கடல்வெளியில்
உப்புதிருங் காற்றின் உதவியுடன்
கரைசேர
செத்தவராய்ப் போனோம் நாம்
அவளோ..
சாகா வரமெடுத்தாள்
மீண்டும் எமைச் சுமக்க...

குமுதினியின் வயது எண்பதைத் தாண்டினாலும் இத்துன்பியல் இன்றுடன் முப்பத்திரண்டு ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. எமது வாழ்வின் நெருக்கீடுகளையும், தடைகளையும், உணர்ந்து கொள்ளும் ஒரு நாளாக இன்றைய நாள் அமையும். குமுதினிக்குள் நடந்த இந்த சோகங்களைப் போல் குமுதினியும் பல சோகங்களை சுமந்தும் நெடுந்தீவு மக்களைச் சுமந்து கரை சேர்க்கும் தாயாக பெரும் பொறுப்பைச் செய்து வருகின்றாள்.

ஈரமின்றி இறுகிப்போன மனித மனங்களுக்கு வாழ்வின் வலியையும், வழியையும், வனப்புக்களையும் சொல்லும் வளமான ஆசானாய் இன்றும் எம்முடனே வலம் வரும் குமுதினியாள் என்றும் அவளே துணை நின்ற நினைப்புகளுடன் எம்மவரின் கடல்வழிப் பயணம் தொடர்கின்றது.

## துயரங்கள் தூசி படிய... தொடரும் வேதனைகள்...

### குற்றவாளிகள் யார்?

அன்றைய அரசின் கட்டளைக்கு அமைய செய்யப்பட்டதாகக் கருதப்படும் இச்சரித்திர நிகழ்வு காலங்காலமாக ஊடகங்களாலும் ஊரவராலும் பேசப்பட்டாலும் "அரசியல்வாதிகள்" இன்னும் சிறு பிள்ளைகளாகவே இருப்பதாய் எண்ணத் தோன்றுகின்றது. குற்றவாளியாகக் கொள்ளத்தக்கவர்களுக்கு, பாத பூசை செய்பவர்களாக நம்மவர்கள் (?) மாறி விட்டார்களா? படையினரைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. கட்டளைகளை காலத்தின் கட்டாயத்தின் பேரில் செய்ய வேண்டியதே பணியாள் தொகுதியின் கடமையல்லவா?

இன உச்சிப்பம், மத நல்லிணக்கம் என்பவற்றின் பேரால் இந்த இழப்புக்களையும் மறப்பதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது. எமக்கு அமைதியாய் அமைதிக்காய் மௌனிப்போம். ★

காலைக்கதிர் Kalaikkathir





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 32

தரம்-5

பகுதி - II

16) ஒரு நாட்டின் இயற்கைச் சூழலும் மனிதர்களின் நற்செயல்களும் அந்நாட்டுக்குச் சிறப்பைத் தருகின்றன. நல்ல மனிதர்கள் வாழும் நாட்டின் மதிப்பு உலகின் எல்லாத் திசைகளிலும் பரவுகின்றது. "நல்ல மனிதனிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கவழக்கங்கள்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

17) குறித்த மோட்டார் வாகனத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 8 கிலோமீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூ 150 எனின், 40 கிலோமீற்றர் செலுத்தத் தேவையான பெற்றோலுக்கான செலவு யாது?

..............................................................................

18) 2012 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் முகுந்தனின் வயது 10 ஆண்டுகளும் 5 மாதங்களும், கமலனின் வயது 12 ஆண்டுகளும் 8 மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத் தொகையைக் காண்க?

..............................................................................

19) 1 லீற்றர் 500 மில்லி லீற்றர் நீரை நான்கு குவளையில் சமமாக இருக்கும் நீரின் அளவைக் காண்க. ( 1 லீற்றர் = 1000 மில்லிலீற்றர் )

..............................................................................

20) வெற்றிடங்களை நிரப்புக

1 kg 750g

\+ 2 kg 5

00g

.......kg.......g

- சரியான விடையின் கீழ் கோடிடுக

21) இலங்கையின் தேசிய பறவை

1. குயில் 2. கிளி 3. காட்டுக்கோழி 4. புறா

22) நீரில் மாத்திரம் வாழும் விலங்கு

1. ஆமை 2. இறால் 3. தவளை 4. வாத்து

23) பின்வரும் எத்தாவரம் இயற்கையாகவே ஒரு சுவையான பானத்தை எமக்கு தருகின்றது?

1. தோடை 2. எலுமிச்சை 3. செவ்விளநீர் 4. விளா

24) உடல் வளர்ச்சிக்குரிய உணவு

1. சோறு 2. கரட் 3. அன்னாசி 4. பயறு

25) நெற்றுக்களை உண்டாக்கும் மரம்

1.பயற்றை 2. சிறகவரை 3. வெண்டி 4. [illegible]

26) நுளம்புகளால் மட்டும் பரவும் நோயைக் கொண்ட விடை எது?

1.மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய்


2.மலேரியா, கழிச்சல், கொள்ளைநோய்

3.கழிச்சல், டெங்கு, கொள்ளைநோய்

4.டெங்கு, மலேரியா, கழிச்சல்

27) துளைக் கமராவினூடாக உருவம் தெரியும் விதம்

1. 2. 3. 4.



28) சூரிய ஒளி நன்றாக விழும் இடத்தில் ஒரு மரத்தின் கிளை பரிசோதனைக்காகப் பொலித்தீன் பையினால் மூடிக்கட்டப்பட்டு வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் அதனை அவதானித்த போது


1. அதனது இலைகள் வாடிக் காணப்பட்டன.
2. இலைகள் ஓரளவு மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.
3. பையினுள் சிறிய நீர்த்துளிகள் படிந்து காணப்பட்டன
4. பையின் உள்ளேயும் வெளியேயும் நீர்த்துளிகள் படிந்து காணப்பட்டன

29) விழாக்களில் மேளவாத்தியத்துடன் பயன்படும் வேறொரு பொருள்

1. புல்லாங்குழல் 2. சங்கு 3. மணி 4.நாதஸ்வரம்





# வித்தைக்காரனை வென்ற ராமன்

டில்லி மாநகரத்திலிருந்து ஒரு வித்தைக்காரன் விஜய நகரத்துக்கு வந்திருந்தான். அவன் மேஜிக் செய்வதில் வல்லவன்.

அவன் அரண்மனையில் மன்னர் கிருஷ்ண தேவராயர் முன்னிலையில் கல்லைப் பொன்னாக்கினான். மண்ணை சர்க்கரை ஆக்கினான்.

மேலும் வெறும் தாளை ரூபாய் நோட்டுக்கள் ஆக்கினான். மேலும் அவன் தலையையே வெட்டி அவன் கைகளில் ஏந்தினான். இந்த நிகழ்ச்சியைப் பார்த்த மன்னர் மகிழ்ந்தார்.

அப்போது மன்னரிடத்தில் என்னை வெல்ல உங்கள் நாட்டில் யாரேனும் உண்டா? என்று சவால் விட்டான். இது மன்னருக்குப் பெருத்த வேதனை அளித்தது.

அறிஞர் பெருமக்கள் பலரையும் அழைத்து டில்லி வித்தைக்காரனை உங்களில் யாரேனும் வெல்ல முடியுமா? அப்படி வென்றவருக்கு 1000 பொற்காசு பரிசு என்றான் மன்னர்.

என்னால் அந்த வித்தைக்காரனை வெல்ல முடியும் என்றான் தெனாலிராமன். அதைக் கேட்ட மன்னர் மகிழ்ந்தார்.

மறுநாள் போட்டியைப் பார்க்க அரண்மனையில் கூட்டம் கூடிவிட்டது.

போட்டி ஆரம்பம் ஆகியது. வித்தைக் காரனைப் பார்த்து தெனாலிராமன் நான் கண்ணை மூடிக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்வேன். அதே காரியத்தைக் கண்ணைத் திறந்து கொண்டு உன்னால் செய்ய இயலுமா? என்றான் தெனாலிராமன்

இது என்ன பிரமாதம்.


நீ கண்ணை மூடிக்கொண்டு செய்யும் காரியத்தைக் கண்ணைத் திறந்து கொண்டே என்னால் செய்ய இயலும் என்றான் வித்தைக்காரன் போட்டியை ஆரம்பி என்றான் வித்தைக்காரன்.

உடனே தான் தயாராக வைத்திருந்த மிளகாய்ப்பொடியை எடுத்துக் கண்ணை மூடிக்கொண்டு கண் மேல் வைத்தான்.

இதே வித்தையைத்தான் நான் உன்னைக் கண்ணை திறந்து கொண்டு செய்யச் சொன்னேன். செய் பார்க்கலாம் என்றான். தன்னால் இயலாது என்றுணர்ந்த வித்தைக்காரன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

மன்னர் தெனாலிராமனின் தந்திரத்தைப் பாராட்டி ஆயிரம் பொற்காசு பரிசளித்தார்.

# சரியான நிழல்களைக் கண்டுபிடியுங்கள்






## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 33, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்.

# உயர் மட்ட அரசியல், அரச துறைகளில் பெரும் ஊழல்; நாடு பேராபத்து நிலையில்!

## எச்சரிக்கின்றார் கோட்டாபய



2030 ஆம் ஆண்டுகளில் உலகின் பொருளாதார போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை பின்தள்ளி சீனா முதலிடத்தை பிடிக்கும். அடுத்த கட்டமாக ஆசியாவை நோக்கிய உலக மயமாக்கல் சக்திகள் பரிணமிக்கும். இவ்வாறான நிலையில் இலங்கை என்ன செய்யப்போகின்றது? பொருளாதார வளர்ச்சி ஓட்டத்தில் இணைந்து பயணிப்பதா அல்லது தனித்து விடப்படுவதா என்ற கேள்விகள் எழுகின்றன என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

'அறிவியல் மிகுந்த இலங்கை எனும்' தொனிப் பொருளில் 'வியத்மக' எனும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு ஷக்ரிலா ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், முதலீட்



டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே கோட்டாபய ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டார்.

'உயர்மட்ட அரசியல் மற்றும் அரசாங்க துறையின் ஊழலே இன்று நாட்டைப் பெரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. உயர்மட்ட அரசியல் ஊழல் மற்றும் உயர்மட்ட அரசாங்கத்துறையின் ஊழலை முழுமையாக ஒழிக்க வேண் டும். ஊழல் இல்லாத அரசாங்கம் மற்றும் அரச சேவையைக் கட்டியெழுப்பும் நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். இனங்களுக்கு இடையிலான சமத்துவம், சட்ட ஒழுங்குகளில் சுயாதீனம் மற்றும் ஜனநாயக செயற்பாடுகளை பலப்படுத்தும் பொருளாதார நோக்கு இருக்க வேண்டும்.

2030 ஆம் ஆண்டுகளில் உலகின் பொரு ளாதார போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை பின்தள்ளி சீனா முதலிடத்தை வைக்கும் என்றும் மூன்றாம் இடத்தில் இந்தியாவும், நான்காம் இடத்தில் ஜப்பானும் ஐந்தாம் இடத்தில் இந்தோனேசியாவும் இருக்கும் என்பதும் உலக அறிவியலாளர் மற்றும் பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளன.

ஆகவே அடுத்த கட்டமாக ஆசியாவை நோக்கிய உலகமயமாக்கல் சக்திகள் பரிணமிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறான நிலையில் இலங்கை என்ன செய்யப்போகின் றது? பொருளாதார வளர்ச்சி ஓட்டத்தில் இணைந்து பயணிப்பதா அல்லது தனித்து விடப்படுவதா என்ற கேள்விகள் எழுகின்றன. ஆகவே தான் 'வியத்மக' எனும் அறிவியல் மிகுந்த அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக இலங்கையை அறிவியல் பொருளாதாத்தின் பக்கம் கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தை நாம் ஆரம்பிக்க தீர்மானம் எடுத்துள்ளோம்.

பொருளாதார வளர்ச்சியால் மட்டுமே எமது நாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல முடியும். பொருளாதார பலம் இல்லையேல் வேறு எந்தச் செயற்பாட்டையும் வெற்றி கொள்ள முடியாது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கான பதில் இந்த ஒரு விடயத்திலேயே தங்கியுள்ளது. ஆனால் எமது நாட்டின் அடிப்படை பொருளாதார தன்மையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார வளர்ச்சி கட்டமைப்பில் மாற்றங்களை செய்தாக வேண்டும். நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் கலாசாரத் தன்மைகளை கருத்தில் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். அதேபோல் உலகுடன் இணைந்த பொருளாதாரப் பயணம் ஒன்று முன்னெடுக்கப்படுவதை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

இலங்கையில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிப் பொருளாதார முறைமைகள் குறைந்த அளவிலான தொழிநுட்ப முறைமையிலே பயணிக்கின்றன. ஆகவே புதிய தொழிநுட்ப பொருளாதார நகர்வுகளை நாம் கையாளவேண்டும். திறன்சார், தொழிநுட்ப அறிவுசார் பொருளாதார நகர்வுகளை கையாள வேண்டும். தனிநபர் வருமானம் தலா 4000 டொலர்கள் என்ற நோக்கை இன்று உலக நாடுகள் கருதுகின்ற நிலையில் நாமும் அதற்கான பயணத்தை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் சர்வதேச முதலீடுகள் அவசியமான ஒன்றாக உள்ளது. முதலீடுகள் பலமானதாக அமைய வேண்டும். பலவீனமான முதலீடுகள் நாட்டின் கடன் நெருக்கடியை மேலும் அதிகரிக்கும். அத்துடன் வியாபார நோக்கம் கொண்ட முதலீடுகளுக்கே முக்கியத்துவம் வழங்க பட வேண்டும். அதே போல் விவசாய துறையையும் பலப்படுத்த வேண்டும். எனினும் விவசாய உற்பத்திகளையும் தொழிநுட்பம் சார்ந்த விவசாயமாக கையாள வேண்டும்.

அதேபோல் அரசமைப்பு சார்ந்த நகர்வுகளும் முக்கியமானதாகும். அரசமைப்புக்கு அப்பாலான எந்த செயற்பாடுகளும் நாட்டினையே பாதிக்கும். அத்துடன் இனங்களுக்கு இடையிலான சமத்துவம், சட்ட ஒழுங்குகளில் சுயாதீனம் மற்றும் கடினத்தன்மை, ஜனநாயக செயற்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

இன்று எமக்குள்ள பெரிய நெருக்கடி அரச துறையின் மற்றும் அரசியல் உயர் மட்ட ஊழல் மோசடிகளேயாகும். உயர் மட்ட அரசியல் ஊழல் மற்றும் உயர் மட்ட அரசாங்க துறையின் ஊழலை முழுமையாக ஒழிக்க வேண்டும். ஊழல் இல்லாத அரசாங்கம் மற்றும் அரச சேவையை ஒன்றைக் கட்டி யெழுப்பும் நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (உ)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தோல்வியடைந்து விட்டது அரசு

## ஐ.தே.கவின் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் விசனம்

இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில்தற்போதைய அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜி புர் ரஹ்மான், தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ள போதிலும், சட்டத்தின் ஆட்சியை நிலைப்படுத்துவதில், அரசாங்கத்துக்கு ஓரளவுக்கு வெற்றி கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதிலும், கடும்போக்குக் குழுக்களை தடுத்து நிறுத்துவதிலும் அரசாங்கத்தின் தோல்வி, அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வன்முறைகளில் வெளிப்பட்டிருந்தது.

நாடகங்கள் மூலமாகவும் ஏனைய விடயங்கள் மூலமாகவும், நல்லிணக்கத்தைக்



கொண்டுவர முடியாது. நடைமுறைச் சாத்தியமான ஏதாவதொன்று செய்யப்பட வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களை, பல்வேறு பதவிகளில் அமர்த்துவது சிறந்த வழியாக அமையும்.

ஒரு மாகாணத்துக்கேனும், முஸ்லிம் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மலசலகூடக் குழிக்குள் இருந்து எட்டு ரி 56 துப்பாக்கிகள் மீட்பு



அச்சுவேலிப் பகுதியில் சம்பவம்

அச்சுவேலி பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மலசலகூட குழியில் இருந்து எட்டு ரி 56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இந்தத் துப்பாக்கிகளை மீட்டுள்ளனர்.

கழிப்பறைப் பாவனைக்கு என வீட்டு உரிமையாளர்கள் குழி தோண்டியுள்ள போதிலும் அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை.

அந்த குழிக்குள் இந்த துப்பாக்கி எவ்வாறு வந்ததென தெரியாது என்று வீட்டு உரிமையாளர்கள் பொலிஸாரிடம் குறிப் பிட்டுள்ளனர். இந்த வீட்டில் உள்ளவர்கள் போரின் போது வீட்டை கைவிட்டு சென்றவர்களாவர். அவர்கள் கைவிட்டு சென்ற பின்னர் விடுதலை புலிகள் இந்தக் குழிக்குள் துப்பாக்கிகளை போட்டுச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர். அச்சுவேலிப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பஸ் கட்டண உயர்வு குறித்து அமைச்சரவை இன்று ஆராய்வு

எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படும் நிலையில் இன்றையதினம்நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அது தொடர்பான யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இதற்கிணங்க இன்றைய தினம் அமைச்சரவையில் அந்த யோசனை முன்வைக்கப்பட்டு அங்கேயே எவ்வளவு ரூபாவால் கட்டணத்தை அதிகரிப்பது என்பது தொடர்பரக தீர்மானிக்கப்படவுள்ளது.

பஸ் கட்டணத்தை 20 வீதத்தால் அதிகரிக்காவிட்டால் 17ஆம் திகதி முதல் சேவை நிறுத்த போராட்டத்தில் ஈடு படுவோமென பஸ் சங்கமொன்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் நேற்றும் தொடர்ந்து குண்டுத் தாக்குதல்

## தேவாலயங்களை அடுத்து பொலிஸ் நிலையம் மீது



7 பேர் பலி; பத்துப் பேர் காயம்

இந்தோனேசியாவில் தொடர்ந்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. நேற்றுபொலிஸ்தலைமை அலுவலகத்தில் குண்டுவெடிப்பில் 7 பேர் பலியாகினர்.

இந்தோனேசியா நாட்டில் சுரபயா என்ற இடத்தில்பொலிஸ் தலைமை அலுவலகத்தில் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் நடத்திய இந்த வெடிகுண்டு தாக்குதலில் பொலிஸ் அலுவலகத்தில் இருந்த 7 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்பு உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 8.50 மணியளவில் நிகழ்ந்ததாக கிழக்கு ஜாவா பொலிஸ் செய்தி தொடர்பாளர் பிரான்ஸ்பாருங் மாங்க்ரா தெரிவித்தார். குண்டு வெடிப்பில் நான்கு பொலிஸ்காரர்களும் ஆறு பேரும் காயமடைந்தனர் எனவும் ஏழு பேர் கொல்லப்பட்டனர் என முதல்கட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



மேலும் இச்சம்பவம் குறித்து நடத்தப்பட்ட விசாரணையில் ஒரு வாகனத்தில் வந்த 2 பெண்கள் பொலிஸ்நிலையம் அருகே வந்த போது வாகனத்தை ஓட்டி வந்த அந்தப் பெண் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார் என்பது அங்கிருந்த சி.சி. டிவி காட்சிகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை இந்தோனேசியத் தேவாலயங்களில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதல் 13 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தோனேசியாவின் இரண்டாவது பெரிய நகரான சுரபயாவில் உள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தற்கொலைப் படையினர் நடத்திய குண்டுவெடிப்பு தாக்குதலில் குறைந் தது 13 பேர் இறந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலநிமிட இடைவெளியில்நடந்த இந்த தாக்குதல்களில் பல டசின் மக்கள் காயமடைந் துள்ளனர்.

இந்த தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை எந்த குழுவும் பொறுப்பேற்கவில்லை.

தாக்குதல் நடந்த ஒரு தேவாலயத்தின்நுழைவாயிலில்குப்பைகள் மற்றும் சிதிலங்கள் சிதறிக் கிடப்பதை தொலைக்காட்சியில் வெளியான படங்கள் காண்பித்துள்ளன.

முஸ்லிம்கள் பெருமான்மையாக வாழும் இந்தோனேசியாவில், அண்மைய மாதங்களில் இஸ்லாமிய தீவிரவாதம் அதிகரித்து வருகிறது.

இந்தக் குண்டுவெடிப்புகள் உள்ளூர்நேரப்படிநேற்றுக்காலை 7.30 மணிக்கு நடந்துள்ளன.

இந்த குண்டுவெடிப்புத் தாக்குதல்களை, இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஐ.எஸ். அமைப்பால் ஈர்க்கப்பட்ட ஜெம்மா அன்ஷரட் தவ்லா என்ற குழு நடத்தியிருக்கலாம் என்று இந்தோனேசியாவின் உளவுத் துறை அமைப்புத் தெரிவித்துள்ளது.

---

மும்பாய் தாக்குதல் பற்றிய

# நவாஸ் ஷெரீப்பின் கருத்தால் பாகிஸ்தானில் பெரும் சர்ச்சை



## இராணுவத்தின் கோரிக்கையில் பாதுகாப்புச் சபை கூடுகிறது

இஸ்லாமாபாத், மே 15

மும்பையில் 2008 நவம்பரில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பாகிஸ்தானுக்கு எதிரான கருத்துக்களை அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியமையை அடுத்து, அது குறித்து தேசிய பாதுகாப்பு குழு கூட்டத்தை கூட்டி ஆலோசிக்கும்படி அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

மும்பையில் 2008ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 150இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பாகிஸ்தான் பயங்கரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என இந்தியா குற்றம்சாட்டி வரும் நிலையில், அதனை பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வருகிறது. இதுதொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு உண்டு என்பதை அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீப் முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார். இது தொடர்பாக 'தி டான்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. அவர்களை அரசு சாராதவர்கள் என்று சொல்லலாம். அவர்கள் எல்லை தாண்டிச்சென்று, மும்பையில் தாக்குதல் நடத்தி மக்களில் 150 பேரை கொல்ல நாம் அனுமதித்து இருக்கலாமா? இதை எனக்கு விளக்குங்கள். இந்த வழக்கு விசாரணையை நம்மால் முடிக்க முடியாதா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரம் பாகிஸ்தான் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தான் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் நவாஸ் ஷெரீபின் கருத்து அமைந்துள்ளதால் தேசிய பாதுகாப்பு தொடர்பாக உயர்மட்ட குழுகூட்டத்தை பாகிஸ்தான் இராணுவம் கூட்டியுள்ளது.

மும்பை தாக்குதல் குறித்து ஊடகங்களில் சமீபத்தில் வெளியான தகவல்கள் குறித்து ஆலோசனை நடத்தும்படி பிரதமர் அப்பாசியையும் இராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது. இராணுவம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

---

## அமெ. நடிகையை இளவரசர் ஹரி மணம் செய்ய மகாராணி அனுமதி



லண்டன், மே 15

இளவரசர் ஹரி - அமெரிக்க நடிகை மேகன் மார்கிளே திருமணத்துக்கு இங்கிலாந்து ராணி சம்மதம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் பேரனும், இளவரசர் சார்ள்ஸின் இளைய மகனுமான இளவரசர் ஹரி, பிரபல அமெரிக்க நடிகை மேகன் மார்கிளேயை கடந்த 2 ஆண்டுகளாக காதலித்து வருகிறார். இருவரும் அரச குடும்பப் பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என அண்மையில் தகவல்கள் வெளியாயின.

எனினும் இதுபற்றி 92 வயது ராணியிடம் இருந்து எந்த அறிவிப்பும் வெளியாகாமல் இருந்தது. ஏனென்றால் இங்கிலாந்து அரச குடும்பத்தில் அரியணை ஏறத் தகுதியுள்ள முதல் 6 பேர் ராணியின் சம்மதத்தை பெற்றால் தான் திருமணம் செய்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ராணி எலிசபெத், பேரனின் திருமண முடிவுக்கு நேற்று அதிகாரபூர்வமான முறையில் அங்கீகாரம் அளித்தார். இது தொடர்பாக பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து ராணி எலிசபெத் கையெழுத்துடன் கூடிய அறிவிப்பு ஆவணம் வெளியிடப்பட்டது.

அதில், வருகிற 19ஆம் திகதி பெர்க்ஷையர் 'வின்சர்' அரண்மனையில் உள்ள செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்தில், 33 வயது ஹரிக்கும் நடிகை மேகன் மார்கிளேவுக்கும் (வயது 37) திருமணம் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

---

# சிங்கப்பூரில் ஆட்சி மொழியாக தமிழ் தொடர்ந்தும் நீடிக்கும்

## அந்த நாட்டு அமைச்சர் உறுதி

சிங்கப்பூர், மே 15

சிங்கப்பூரில் உள்ள 4 ஆட்சி மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. தமிழ் தொடர்ந்தும் அங்கு ஆட்சிமொழியாக இருக்கும் என்று சிங்கப்பூரின் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் எஸ். ஈஸ்வரன் உறுதியளித்தார்.

சிங்கப்பூரில் உள்ள 4 ஆட்சி மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். அத்தகைய மரியாதையை அந்நாட்டில் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுள்ளது. பள்ளிகள், கல்லூரிகளிலும் தமிழ் தாய் மொழியாகப் பயிற்றுவிக்கப்படுகிறது.

அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகளிலும் தமிழ்மொழி அதிகாரபூர்வமாக பயன்படுத்தப்படுகிறது. சிங்கப்பூரின் கரன்ஸியிலும் ஆங்கிலம், சீனா, மலேய் ஆகிய மொழிகளோடு தமிழ் மொழியும் அச்சிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

'சிங்கப்பூரை நவீனமாக்கிய தமிழ்சமூகத்தினர்' என்ற தலைப்பில் நூல்வெளியீட்டு விழா சிங்கப்பூரில் நேற்று நடந்தது. இந்த நூலை சிங்கப்பூரின் வெளியுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் வெளியிட்டார். இந்த நூலை வெளிநாடு வாழ் இந்தியர் சவுந்திரநாயகி வைரவன் எழுதியுள்ளார்.



இந்த நூல் வெளியிட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஈஸ்வரன் பேசுகையில், சிங்கப்பூரில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சிங்கப்பூர் அரசு தீர்மானம் கொண்டுள்ளது.- என்றார்.

அதனால்தான் நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வ பேச்சு மொழியாகவும் பள்ளிக்கூடங்களிலும் பயிற்று மொழியாகவும் அது ஆக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்கு முழுமையான ஆதரவு அளிப்பதை அரசு கொள்கையாக வகுத்துள்ளது. இந்த நாட்டில் உள்ள தமிழ்சமூகத்தினர் குறிப்பாக இளைஞர்களிடம் தமிழ் மொழியை கொண்டு சேர்த்து, அன்றாட வாழ்க்கையில், பயன்பாட்டு மொழியாக்கி உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும்.

தமிழ்மொழியை பரப்புவதற்கும், தமிழ் கலாசாரத்தை காப்பாற்றவும் இளைய சமூகத்தினரிடம், விழிப்புணர்வையும், அவர்களின் பங்களிப்பையும் அதிகப்படுத்த வேண்டும். அதற்காக தமிழ் மொழித் திருவிழாவை நடத்த வேண்டும்.- எனத் தெரிவித்தார்.

# ரூ.15 ஆயிரம் கோடி செலவில் இந்தியா போர் தளபாட உற்பத்தியில் தீவிரம்

இந்தியப் பணத்தில் ரூ.15 ஆயிரம் கோடியில் ஆயுதங்களைத் தயாரிக்கும் திட்டத்தை இந்திய இராணுவம் இறுதி செய்துள்ளது. இதன் மூலம் இராணுவத்துக்குத் தேவையான முக்கிய ஆயுதங்கள், பீரங்கிகள் உள்ளிட்டவை உள்நாட்டியிலேயே தயாரிக்கப்பட இருக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வதில் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து தாமதம் நிலவி வருவதால் உள்நாட்டிலேயே ஆயுதங்களைத் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் மிகப் பெரிய ஆயுதத் தயாரிப்புத் திட்டமான இதில் 11 தனியார் நிறுவ



னங்களும் ஈடுபட இருக்கின்றன.

இராணுவ உயரதிகாரிகளின் கண்காணிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களை முடிந்த அளவுக்கு விரைவாக உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டில் ஆயுதத் தயாரிப்பில் ரூ.15 ஆயிரம் கோடி செலவிடப்பட இருக்கிறது.

முதல் கட்டமாக ராக்கெட் குண்டுகள், வான் பாதுகாப்பு ஆயுதங்கள், துப்பாக்கிகள், தரைப்படையினருக்கான பீரங்கி உள்ளிட்ட வாகனங்கள், குறைந்த தொலை வுக்கு வெடிகுண்டுகளை வீசும் கருவிகள் உள்ளிட்டவை தயாரிக்கப்படவுள்ளன. இவற்றை உற்பத்தி செய்வதற்கு உரிய காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டு, கெடுவுக்குள் பணிகள் முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டைநாடான சீனா தனது ஆயுத பலத்தை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் இந்தியா பல்வேறு முக்கிய ஆயுதங்களுக்குப் பெரும்பாலும் வெளிநாடுகளைச் சார்ந்தே உள்ளது. இதனால், போர் பதற்றம் ஏற்படும் நேரத்தில் உடனடியாக ஆயுத பலத்தை அதிகரிக்க முடியாத சூழல் உள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்திய இராணுவமும், பாதுகாப்புத் துறை அமைச்சகமும் கடந்த பல ஆண்டுகளாக தீவிர முயற்சி மேற்கொண்டு வந்தன. அதன் பயனாகவே ரூ.15,000 கோடி மதிப்பில் ஆயுத தயாரிப்பு திட்டம் உருவாக்கப்பட்டது. இது இப்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

கடந்த ஜூலை மாதம், தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி, இராணுவம் தொடர்பான ஓர் அறிக்கையை தாக்கல் செய்தார். அதில், இந்திய ராணுவத்தில் 152 வகையான ஆயுதங்கள் பயன்பாட்டில் இருந்தாலும், அவற்றில் 61 வகை ஆயுதங்கள் தான் உடனடியாகக் கிடைக்கும் நிலையில் உள்ளன. இந்த ஆயுதங்கள் கூட போர் ஏற்பட்டால் 10 நாள்களில் தீர்ந்து விடும் அளவில்தான் இருப்பு உள்ளது என்று கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து, போருக்காக ஆயுத ரீதியாக இந்திய இராணுவம் எந்த அளவுக்கு தயாராக உள்ளது? என்ற கேள்வி எழுந்தது.

## காவிரி நதி நீர்ப் பங்கீட்டுக்கு 10 பேர் கொண்ட உயர்குழு



உச்சநீதிமன்றத்தில் வரைவு அறிக்கை தாக்கல்

புதுடில்லி, மே15

காவிரி நதிநீர் பங்கீட்டுச் சர்ச்சை தொடர்பாக மத்திய அரசு நேற்று உச்ச நீதிமன்றத்தில் வரைவு செயல் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அமைச்சரவை ஒப்புதலுக்குப் பிறகு அரசிதழில் அதை வெளியிட உள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அதற்கு முன்பாக அந்த அறிக்கையின் பிரதிகளை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு வழங்கி அவர்களின் கருத்துக்களை கேட்டறியும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு விசாரணையை 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

மத்திய அரசு தாக்கல் செய்துள்ள வரைவு அறிக்கையில், நதிநீர் பங்கீடு தொடர்பாக முடிவு எடுப்பதற்கு ஒரு குழுவை அது பரிந்துரை செய்துள்ளது. 10 பேர் கொண்ட அந்தக் குழுவில் தலைவர், மத்திய அரசு அதிகாரிகள் 5 பேர், மாநில பிரதிநிதிகள் 4 பேர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய நீர்வளத்துறை செயலாளர் யு.பி.சிங்கும் இந்த குழுவில் இடம்பெறுவார். காவிரி தொடர்பான அமைப்பின் தலைவர், 5 ஆண்டுகள் பதவியில் நீடிக்க முடியும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. காவிரி நடுவர் மன்றம் கூறிய பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த அவகாசமே இருப்பதால் இன்றே வரைவு செயல் திட்ட நகல்கள் மாநில அரசுகளிடம் வழங்கப்படும். அதன்பின்னர் மாநில அரசுகள் அதில் உள்ள அம்சங்களால் தங்கள் மாநிலத்திற்கான சாதக பாதகங்கள் குறித்து ஆய்வு செய்து நீதிமன்றத்தில் தெரிவிக்கும்.

தமிழக அரசு எடுத்த சட்ட நடவடிக்கையால், வரைவு செயல் திட்டத்தை மத்திய அரசு தாக்கல் செய்திருப்பதாகவும், வரைவு செயல் திட்டத்தின் குறை, நிறைகளை ஆராய்ந்து, நாளை பதில் மனு தாக்கல் செய்யப்படும் என்றும் தமிழக அமைச்சர் சி.வி. சண்முகம் தெரிவித்தார்.

காவிரி விடயத்தில் நடுநிலையாகச் செயல்பட்டு நதி நீரை திறந்துவிடுவதற்கு இந்த குழுவிற்கு முழு அதிகாரம் உள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. தண்ணீரை திறந்துவிடும் அதிகாரம், மத்திய அரசு பரிந்துரைக்கும் குழுவுக்கு இல்லை என்றால் நீதிமன்றத்தில் எதிர்ப்பு தெரிவிக்க உள்ளதாக தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் கூறியிருக்கிறார்.

எனவே, நாளை நடைபெறும் விசாரணை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். மத்திய அரசு கேட்டபடி, 'ஸ்கீம்' என்பது வாரியமா? அல்லது குழுவா? என்பதை உச்ச நீதிமன்றம் தெரிவிக்கவும் வாய்ப்பு உள்ளது.

## கனமழை, புழுதிப் புயலுக்கு இந்தியாவில் 60 பேர் சாவு!

புதுடில்லி, மே15

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நேற்றுமுன்தினமும் கனமழையுடன் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புழுதி புயலுக்கு 60 பேர் பலியாகி உள்ளனர்.



உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 18 பேர் பலியாகி உள்ளனர். 28 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதே போன்று ஆந்திரா, மேற்குவங்கம், டில்லி பகுதிகளிலும் புழுதி புயலுக்கு ஏராளமானோர் பலியாகி உள்ளனர். மரங்கள் முறிந்து விழுந்தமையால் ஏராளமான கார்கள் சேதமடைந்துள்ளன.

மேற்கு வங்கத்தில் இடி, மின்னலுடன் பெய்த கனமழைக்கு 12 பேர் உயிரிழந்துள்ளனர். 15 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஆந்திராவின் ஸ்ரீகாகுளம் பகுதியில் மட்டும் 7 பேர் மின்னல் தாக்கி பலியாகி உள்ளனர். விசாகப்பட்டினம், கிழக்கு கோதாவரி மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது. கனமழை மற்றும் புழுதி புயலால் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாத வீடியோவைப் பார்த்தமைக்காக பயங்கரவாதி என்றே தீர்மானித்து விடுவதா?

### கேரள உயர் நீதிமன்றம் விசாரணையாளர்களிடம் கேள்வி

கொச்சி, மே15

''சில குறிப்பிட்ட, 'வீடியோ' மற்றும் பேச்சுகளை கேட்டமையை மட்டும் வைத்துக் கோண்டு ஒருவரைப் பயங்கரவாதி என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது''எனக் கேரள உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



கேரள மாநிலம், கொச்சியைச் சேர்ந்தவர் முகமது ரியாஸ். இவர், இந்து மதத்தைச் சேர்ந்த பெண்ணை, காதலித்து திருமணம் செய்தார். இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து, ரியாஸ், தன்னை நிர்வாணமாக படம் எடுத்தார் எனவும், தன்னை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று, ஐ.எஸ்., அமைப்பில் சேர்க்கத் திட்டமிட்டு இருந்தார் எனவும், அவருடன் செல்ல மறுத்தமையால், தன் நிர்வாணப் படங்களை இணையத்தில் பரப்புவேன் என மிரட்டுகிறார் எனவும் அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து, ரியாஸின் வீட்டில், தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதில், ரியாஸின் இரண்டு மடிக்கணினிகள் கைப்பற்றப்பட்டன. இதில், பல பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் பேச்சுக்கள் அடங்கிய வீடியோக்கள் இருந்தன. இதையடுத்து, தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள், ரியாஸைக் கைது செய்து, சிறையில் அடைத்தனர். அவருக்குப் பிணை வழங்க தேசியப் புலனாய்வு நீதிமன்றம் மறுத்தது. இதையடுத்து, கேரள உயர் நீதிமன்றத்தில் ரியாஸ், மேன்முறையீடு செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ''பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் பேச்சுக்கள் அடங்கிய வீடியோ, இணையத்திலேயே கிடைக்கின்றது. அப்படி இருக்கையில், ஒருவர், பார்த்த வீடியோவை வைத்து, அவரைப் பயங்கரவாதி என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது'' எனக் கூறி, முகமது ரியாஸுக்குப் பிணை அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தனர்.

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைதீவுக்கு நேற்றுக் காலை பயணம் மேற்கொண்ட வடக்குமுதலமைச்சர்விக்னேஸ்வரன் அங்கு கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் முப்படையினரும் வைத்திருக்கும்பொதுமக்களின் காணிகளை மீளவும் மக்களிடமே கொடுக்கவேண்டுமென நாங்கள் அரசிடம் கோரியே வருகின்றோம். இதற்கமையச் சில இடங்களில் மிகவும் தாமதமாகக் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இரணைதீவில் உங்கள் காணிகள் விடுவிக்கப் படாமல் உள்ளன. அதாவது அந்த அதிகாரத்தை உங்களுக்குவழங்காமலேயேநீங்கள் உங்கள் உரித்தை நாட்டியிருக்கின்றீர்கள்.

சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்ற மாதிரி நீங்கள் உங்கள் உரித்தைப் பாவிக்கத் தொடங்கியிருக்கின்றீர்கள். அது வொரு முக்கியமான விடயம். ஏனென்றால் அரசு ஜெனீவாவில் வைத்துப் படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகள் எல்லாவற்றையும் மீள அவர்களிடமே கையளிப்போம் என்று கூறிவிட்டு இதுவரை காலமும் அதனைச் செய்யாமலே உள்ளது.

அரச படையினர் மூன்று பிழையான வேலைகளைக் கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு செய்து வந்திருக்கின்றார்கள். இதில் முதலாவதாகப் பெருவாரியான காணிகளைத் தேவையில்லாமல் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றார்கள். அந்தக் காணிகளில் அவர்களுக்குத் தேவைப்படும் இடங்கள் மிகச் சொற்பமானவை. ஆனால் அவர்கள் கூடுதலான இடங்களை எடுத்து மக்களின் வாழ்வாதாரங்களை நசுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அடுத்ததாகப் போர் முடிவடைந்த பிற்பாடு அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும். ஏனெனில் அவர்களின் கடமைகள் அத்தோடு முடிந்து விட்டன. ஆனால் அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. ஏதோவொரு காரணத்தைக் கூறிக் கொண்டு தொடர்ந்து இங்கிருப்பது எங்களுக்குப் பலவிதமான கஷ்டங்களையும் நஷ்டங்களையும் ஏற்படுத்துகின்றது.

அதாவது தொழில் நடவடிக்கைகளில் விவசாயம், மீன்பிடி, வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. தொடர்ந்து படையினர் இங்கிருப்பதால் எங்களுக்குப் பாதகமாக நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் நாங்கள் தொடர்ந்தும் அரசுக்குக் கூறிக் கொண்டு வருகின்றோம். ஆனால் இதற்கான பதில் தொடர்ச்சியாகத் தாமதித்துக் கொண்டு தான் வருகின்றது. வெளிநாட்டு நெருக்குதல்கள் இருந்தால் தான் அரசின் கைகளும்கால்களும் இயங்கத் தொடங்குகின்றன. அவ்வாறானதொரு நிலையில் தான் அரசு இருக்கின்றது.

உங்கள் காணிகளில் நீங்கள் வந்து குடியேறியுள்ள பணியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுங்கள். அது உங்களது உரித்து. அந்த உரித்தை நாங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றோம் என்பதைக் காட்டுவதற்காகவே முதலமைச்சர் என்ற வகையில் நானும் இங்கு வந்திருக்கின்றேன்.

உங்கள் பிரச்சினைகள், தேவைகளைத் தெரிந்து கொண்டு போவதற்காகவும் மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்களுடன் நானும் இங்கு வந்திருக்கின்றேன். - என்றார். (ஜ-7)

### போதைப்பொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணியின் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயலணி தொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகள் குடாநாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் ஒட்டப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மாவா போதைப் பொருள், போதைக் குளிசைகள், ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருள்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

அவற்றை விற்பனை செய்வோருக்கும் பொலிஸாருக்கும் இடையே தொடர்பு உள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்குப் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களின் கடத்தல் - விற்பனையை முற்றாக ஒழிக்கச் சிறப்புப் பொலிஸ் செயலணியை மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமித்துள்ளார்.

அந்தச் செயலணிக்குப் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை 0766093030 என்ற கைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு முன்வைக்க முடியும். முறைப்பாடுகளின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும்.

செயலணி துரிதமாகச் செயற்பட்டுப் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்களைக் கைது செய்யும். எனவே, அனைவரும் இந்த செயற்றிட்டத்துக்கு ஒத்துழைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. (ஜ-7)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைக் கைதி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சிறைக் கைதி ஒருவரைச் சிறைக் காவலர்கள் தாக்கியுள்ளனர். சிறைக்கு வெளியே இருந்து கிடைத்த பொதி ஒன்று தொடர்பில் கேள்வி எழுப்பியே கைதி தாக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது. இதில் படுகாமடைந்த சிறைக் கைதி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சிறைக்கைதி வவுனியா, சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் சிறு குற்றம் ஒன்றுக்காகச் சிறைவாசம் அனுபவித்து வருகின்றவர் என்றும் கூறப்பட்டது. (ஜ-100)

### வினைத்திறனற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் த. காண்டீபன் கோரியுள்ளார்.

மேலதிக நேரக் கொடுப்பனவை உரிய நேரத்தில் வழங்கக் கோரி மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியர்கள் நேற்று வடக்கு மாகாணம் முழுவதும் பணிப் புறக்கணிப்பு நடத்தினர்.

இந்த பணி புறக்கணிப்பு தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வைத்தியர் காண்டீபன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எங்களுடைய இந்தப் பணிப் பகிஷ்கரிப்புக்காகப் பொது மக்களிடம் நாங்கள் மன்னிப்புக் கேட்கிறோம். நாம் எமக்குக் கிடைக்கவேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்காமையையும், அந்த மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்காமல் இழுத்தடிக்கும் அரச அதிகாரிகளையும் கண்டித்துமே இந்தப் பணி பகிஷ்கரிப்பை நடத்துகிறோம்.

வைத்தியர்கள் தமது சேவை நேரத்துக்கு மேலதிகமாக எவ்வளவு நேரம் சேவை செய்தாலும் வெறும் 4 மணித்தியாலங்களுக்கான கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படுவது வழமை. அதனை வழங்குவதற்கு வடக்கு மாகாணசபை அதிகாரிகள் சிலர் தடங்கலாக இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருடன் பேசியபோது 10ஆம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கவேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இதுவரை அது வழங்கப்படாத நிலையில் நாங்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றோம்.

நீங்கள் போராடுங்கள், போராடினால்தான் மத்திய அரசு நிதியைத் தரும் என எங்களுக்குக் கூறப்படுகின்றது. நாங்கள் போராடித்தான் பெறவேண்டும் என்றால் மாகாண சுகாதார அமைச்சு எதற்காக? இலங்கையில் மற்றைய மாகாணங்களில் வைத்தியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு உரிய காலத்தில் வழங்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் மட்டும் சில அதிகாரிகளின் செயற்பாட்டினால் அது பின்னடிக்கப்படுகிறது.

ஆகவே இந்த அதிகாரிகள் மீது முதலமைச்சர் விசாரணை நடத்தவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதை விடுத்து மக்களை அடக்கி ஆள்வதே வடக்கு மாகாணத்தில் உள்ள அரச அதிகாரிகளின் பிரதான செயற்பாடாக இருக்கின்றது. எனவே இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (ஜ-7)

### வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், இந்தக் கொடுப்பனவுகளை வழங்கக் கோரி வடக்கில் உள்ள அரச வைத்தியர்கள் நேற்று ஒரு நாள் அடையாளப் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அடையாளப் பணிப்பகிஸ்கரிப்பில் யாழ்.போதனா வைத்தியசாலை தவிர்ந்த வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்களும் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நோயாளர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-7)

### குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஷான் பெர்னாண்டோ பணித்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தரின் சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கவனிக்காது, அவருக்குத்துணை நின்ற யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தலைமையக் பொலிஸ் பொறுப்பதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் வடபிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகம் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில்தான் போதைப்பொருள்களின் விற்பனை அதிகளவில் இடம்பெறுகின்றது. அவற்றுக்கு பொலிஸாரும் உடந்தையாக உள்ளனர் எனப் பல மட்டங்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் வருகின்றன.

பொலிஸார் மீதான குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்படுகின்றன. பொலிஸ் உத்தியோகத்தர் யாராவது குற்றஞ்செய்திருப்பின் தண்டிக்கப்படுவர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் அப்பு என்பவர் ஆவா குழுவின் வினோத் உள்ளிட்டோருடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தார். கொள்ளைக் கும்பல்கள் - போதைப் பொருள் விற்பனையாளர்களுடனும் அவருக்குத் தொடர்பிருந்துள்ளது.

அவருக்கு எதிரான விசாரணைகளைத் துரிதப்படுத்த வழியாக அவர் மன்னாருக்கு இடமாற்றப்பட்டுள்ளார். உள்ளக விசாரணைகள் நிறைவடைந்ததும் பொலிஸ் உத்தியோகத்தர் அப்புக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அப்புவின் நடவடிக்கைகளைக் கண்காணிக்காது அவருக்குத் துணை நின்ற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு அடுத்தபடியாக கிளிநொச்சி பொலிஸ் பிரிவில்தான் போதைப் பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச்செயல்கள் அதிகம். - என்றன. (ஜ)

### கொள்ளையனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாவடி வடக்குப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள வீட்டுக்குள் கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 2.30மணிக்குக்கொள்ளையன் ஒருவன் புகுந்துள்ளான்.

அந்த வீட்டில் தம்பதியரான சிவலோகநாதன் செல்வராசா (வயது - 62) செல்வராசா இராஜேஸ்வரி (வயது - 58) வசித்து வந்தனர்.

கொள்ளையனைப் பிடிக்க முற்பட்டபோது அவனின் கத்திக் குத்துக்கு இலக்காகி இருவரும் படுகாயமடைந்தனர்.

அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். எனினும் சிகிச்சை பயனின்றி முதியவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் சுன்னாகம் பொலிஸார், குற்றவாளியைத் தேடி வலை வீசியுள்ளதாகத் தெரிவித்தனர். (ஜ)

### இரணைதீவிலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைதீவு மக்கள்.

நேற்று அங்கு பயணம் மேற்கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சரிடம் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 1992ஆம் ஆண்டு போர் காரணமாகச் சொந்த நிலத்தை விட்டு இடம்பெயர்ந்தோம். பின்னர் இரணைமாதா நகரில் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியிலும், போருக்கு மத்தியிலும் வாழ்ந்தோம். வாழ்வாதார ரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் 26 வருடங்கள் வாழ்ந்து வந்தோம்.

இப்போது நாங்களாகவே வெள்ளைக் கொடிகளுடன் எங்களுடைய சொந்த நிலத்தில் மீளக்குடியேறியுள்ளோம்.

எங்களுக்குச் சட்ட ரீதியாக மீள்குடியேறுவதற்கான உரித்துக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். தற்போது பலரும் இங்கு வருகிறார்கள். ஆனால் ஆக்கபூர்வமான பதிலை யாரும் பெற்றுக் கொடுக்கவில்லை. எங்களுக்குச் சட்ட ரீதியாக மீள் குடியேற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்களை வெளியேற்றம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தாலும் நாங்கள் வெளியேறப்போவதுமில்லை. 26 வருடங்களுக்குப் பின்னர் மீள்குடியேறிப் பற்றைகளுக்குள் விஷப் பூச்சிகளுக்கும், பாம்புகளுக்குமிடையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எமக்கு உடனடியாக அரை நிரந்தர வீடுகள் வழங்கப்படவேண்டும். குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற வசதிகளும் செய்துகொடுக்கப்படவேண்டும். - என்றனர். (ஜ-7)

### வெளிநோயாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் உதவிப் பணிப்பாளர் ஆர.கேதீஸ்வரநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

யாழ். போதனா வைத்தியசாலையின் கணினி மயப்படுத்தப்பட்ட நடைமுறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாக வெளிநோயாளர் பிரிவில் கணணிமயப்படுத்தப்பட்ட சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருகை தரும் நோயாளர்களின் பதிவுகள் தற்போது கணினிமயப்படுத்தப்படுகின்றன. இந்தச் சேவைகளைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குக் குறிப்பிட்ட சில மாத காலம் எடுக்கலாம்.

அதன் பின்னர் வைத்தியசாலையின் ஏனைய சிகிச்சைகளும் கணினி மயப்படுத்தப்படவுள்ளன. இந்முறைமை வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே முதலாவதாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதே போன்று வடக்கு மாகாணத்தில் அடுத்ததாக மன்னாரிலும் இந்த நடைமுறை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு கணனிமயப்படுத்தப்பட்ட சேவைகளினூடாக நேர வீண் விரயம் தவிர்க்கப்படுவதுடன் இலகுவில் விரைவான சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். - என்றார். (ஜ-7)

# பிரித்தானிய ரக்பி வீரர் கொழும்பில் மரணம்

## மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் தனியார் வைத்தியசாலையில் அனுமதி

பிரித்தானிய ரக்பி வீரர் ஒருவர் இலங்கையில் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 26 வயதுடைய ரக்பி வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும், ஒரு பிரித்தானிய வீரர் உயிராபத்தான நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி 22 வீரர்கள் அடங்கிய பிரித்தானிய ரக்பி அணி, இலங்கை வந்துள்ளதோடு, அவர்கள் கடந்த 12ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ரக்பி போட்டியில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் அதே நாள் அன்று இரவு இடம்பெற்ற விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டுள்ளனர். பின்னர் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்து மீண்டும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இரவு விடுதி ஒன்றுக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இருவருக்கும் நேற்றுக் காலை திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து அவர்கள் இருவரும் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றைய ரக்பி வீரர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இவ்விடயம் குறித்து பொலிஸார், தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆடுகளத்தில் உயிரிழந்த ரக்பி வீரர்

ஆஸ்திரேலிய ரக்பி வீரரொருவர் விளையாட்டு மைதானத்திலேயே உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

20 வயதான டொரி புரோனிங் என்ற வீரரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை ஆஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸின் இலவொராவில் இடம்பெற்ற ரக்பி லீக் போட்டித் தொடர் ஒன்றின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சம்பவத்தில் உயிரிழந்த வீரர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்ரிட் கிண்ணத்தை முதல்முறையாக முத்தமிட்ட ஸ்வெரவ்!



ஸ்பெய்னில் நடைபெற்ற மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், ஜேர்மனிய வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரவ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில், ஜேர்மனிய வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரவ், உலகின் 7ஆம் நிலை வீரரான டொமினிக் தியீமை எதிர்கொண்டார்.

மிகவும் விறுவிறுப்பாக அரங்கேறிய இப்போட்டியில், ஆரம்பம் முதலே இரு வீரர்களும் கடும் ஆக்ரோஷத்துடன் விளையாடினார்கள்.

ஆனால் இந்த போட்டியில் ஸ்வெரேவிற்கு, தியீம் கடும் அழுத்தம் கொடுத்தார் என்ற போதிலும் தியீமின் அழுத்தத்தையும், சவாலையும் ஸ்வெரவ் சாதுர்யமாக எதிர்கொண்டார்.

முதல் செட்டை 6:4 எனக் கைப்பற்றிய ஸ்வெரவ், இரண்டாவது செட்டையும் 6:4 என கைப்பற்றினார். இதனால், 6:4, 6:4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற அவர் முதன் முறையாக மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் கிண்ணத்தை முத்தமிட்டார்.

(ஐ)

# சம்பியனானார் குவிற்றோவா



ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் இடம்பெற்றுவந்த மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் தொடரில் உலகின் 10ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் பெட்ரா குவிற்றோவா சம்பியனாகியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில், 7:6 (8:6), 4:6, 6:3 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் கிகி பேர்ட்டன்ஸை இரண்டு மணித்தியாலங்களும் 52 நிமிடங்களும் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வென்றே பெட்ரா குவிற்றோவா சம்பியனாகியிருந்தார்.

அந்தவகையில், இத்தொடரை 2011, 2015ஆம் ஆண்டுகளிலும் வென்றிருந்த பெட்ரா குவிற்றோவா, இத்தொடரை மூன்று தடவைகள் வென்ற முதற் பெண்மணியாக தனது பெயரைப் பதிவுசெய்துகொண்டார்.

# தோல்வியுடன் லீக் 1 பட்டம் வென்றது பரிஸ் சென் ஜெர்மைன்



பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், தமது மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற றெனிஸ் அணியுடனான போட்டியில் தோல்வியடைந்தபோதும் நான்கு வாரங்களுக்கு முன்னரே லீக் 1 சம்பியன்களாகத் தம்மை உறுதிப்படுத்தியிருந்த பரிஸ் சென் ஜெர்மைன், லீக் 1 பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் பரிஸ்சென் ஜெர்மைனின் அஞ்சல்டி மரியாவின் உதையொன்றை றெனிஸ் அணியின் கோல் காப்பாளர் தோமஸ் கூபக் தடுத்திருந்தோடு, அவரின் இன்னொரு உதையொன்று கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியிருந்தது. இதன் பின்னர் பரிஸ்சென் ஜெர்மைனின் தோமஸ் மெனுயிரிடமிருந்து வந்த பந்தை கிலியான் மப்பே தலையால் முட்டியபோதும் அது கோல் கம்பத்துக்கு வெளியே சென்றிருந்தது.

இதைத் தொடர்ந்து, றெனிஸ் அணியின் ஜேம்ஸ் லிய சிலிக்கி கொடுத்த பந்தை அட்ரியன் பந்தைத் தலையால் முட்ட அது கோல்கம்பத்துக்கு வெளியே சென்றிருந்தது. இதையடுத்து பரிஸ் சென் ஜெர்மைனின் கிறிஸ்தோபர் என்குன் குவின் உதையை தோமஸ் கூபக் தடுத்திருந்தார். இதைத் தொடர்ந்து கிலியான் மப்பேயின் உதையொன்றும் கோல் கம்பத்துக்கு வெளியால் சென்ற நிலையில் முதற்பாதி கோலெதுவும் பெறப்படாமல் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில், பரிஸ் சென் ஜெர்மைனின் பெனால்டி பகுதிக்குள் வைத்து அவ்வணியின் தியாகோ மொ... ால் அட்ரியன் ஹுனௌ விதிமுறைகளை மீறிக் கையாளப்பட்டார் என வழங்கப்பட்ட பெனால்டியை பெஞ்சமின் பௌரிகெயுட் கோலாக்க றெனிஸ் அணி முன்னிலை பெற்றது. பின்னர் 71 ஆவது நிமிடத்தில் அட்ரியன் பெற்ற கோலுடன் இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் றெனிஸ் வென்றது.

அந்தவகையில், இப்போட்டியுடன் 41 லீக் 1 போட்டிகளில் தமது மைதானத்தில் தோற்காதிருந்த பரிஸ்சென் ஜெர்மைனின் சாதனை முடிவுக்கு வந்திருந்தது.

# கனிஷ்ட ஆசிய மெய்வன்மை போட்டிக்கு 12 பேர் தெரிவு




ஜப்பானின் கிவு நகரில் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள 18ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் இலங்கையிலிருந்து 12 வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

சுகததாச அரங்கில் அண்மையில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிக்காக குறித்துரைக்கப்பட்ட அடைவு மட்டங்களை எட்டியவர்களே தெரிவாகியுள்ளதாக தெரிவுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அருண தர்ஷன, பசிந்து கொடிகார, பபசர நிப்பு, ரவிஷ்க இந்த்ரஜித், சந்... கருணாரத்ன (4 தர 400 மீற்றர் தொடர்ஓட்டம் ஆண்கள்), அமாஷா டி சில்வா, டில்ஷி ஷியாமலி குமாரசிங்க, இஷாரா ஆதித்யா, சச்சினி திவ்யாஞ்சலி, சவிக்ர பாஷினி பண்டார (4 தர 400 மீற்றர் தொடர் ஓட்டம் பெண்கள்), தரிந்து தசுன் (உயரம் பாய்தல் ஆண்கள்), ரித்மா நிஷாதி அபேரட்ன (நீளம் பாய்தல் பெண்கள்) ஆகியோர் தெரிவாகியுள்ளனர். இவர்களில் அமாஷா டி சில்வா 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அருண தர்ஷன மற்றும் ஷியாமிலி ஆகியோர் 400 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Kolkata Knight Riders - Rajasthan Royals
இன்று
15.05.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir



# மக்களின் ஈடேற்றத்துக்கான நிகழ்வாக முள்ளிவாய்க்கால் நினைவு அமையட்டும்

கிளிநொச்சி, மே 15

முள்ளிவாய்க்கால்-மே18நினைவு கூரல் நிகழ்வு, ஒரு நாள் சடங்காக அமையாமல், பாதிக்கப்பட்ட மக்களின் நிகழ்கால, எதிர்கால ஈடேற்றத்துக்கான நிகழ்வாக அமைய வேண்டும். இந்த நிகழ்வானது இழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் மட்டும் நிறைவடைந்து விடக்கூடாது.

உறவுகளை இழந்த மக்களின் உளத்தை ஆற்றுப்படுத்துவதற்கும், அவர்களுடைய அரசியல் மற்றும் வாழ்க் கையை ஈடேற்றுவதற்குமாக அமைவது அவசியமாகும் என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பின் தாபகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முள்ளிவாய்க்கால் என்பது எமது அரசியற் போராட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது. இங்கே முடிவடைந்த யுத்தமும் அது ஏற்படுத்திய ஆழமான பாதிப்புகளும் எமது மக்களை விட்டு நீங்கவில்லை. இந்தப் பாதிப்பின் வலியோடுதான் ஒவ்வோர் ஆண்டும் இதே நாளில் மக்கள் முள்ளிவாய்க்காலில் பெருந்துக்கத்தோடு ஒன்றிணைகிறார்கள்.

இந்த ஒன்றிணைவானது, எல்லோரும் கூடி அழுது தீர்ப்பதற்கானதல்ல. தங்களுடைய தீராத வலியை, கூட்டு மனவடுவை ஒன்றாகக் கூடி ஆற்றுப் படுத்துவதோடு, தங்களுடைய எதிர்கால ஈடேற்றத்தைக் குறித்த ஏக்கத்தையும் இங்கே வெளிப்படுத்துகிறார்கள்.

அறுபது ஆண்டுகாலப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வழியை இங்கே ஏற்றப்படும் சுடரில் அவர்கள் தேடுகிறார்கள். மக்களுடைய இந்த வேட்கையை நாம் அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் உள்ளோம்.

ஆகவேதான் முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் நிகழ்வைச் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு, எமது மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால அரசியலை உய்த்துணர்வதற்கான ஒரு மையமாகும் என எண்ணுகிறது.

இந்த மையத்திலிருந்து நாம் புரிந்து கொள்கின்ற விடயங்களும்



சந்திரகுமார் வலியுறுத்தல்

எதிர்காலத்துக்காக மேற்கொள்கின்ற தீர்மானங்களும் புதிய அரசியல் முன்னெடுப்புகளை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அரசியல் போட்டிகள், பேதங்கள் போன்ற வேறுபாடுகள் எதற்கும் இடமளிக்காமல், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்த நிகழ்வை நிறைவேற்றுவோம். அதுவே உயிரிழந்தோருக்கும் உறவுகளை இழந்தோருக்கும் நாம் செய்கின்ற மரியாதையும் மதிப்பளித்தலுமாகும்.- என்றுள்ளது. (ஐ)

# 5 ஆண்டுகள் வரி செலுத்தாத வாகனங்களின் பதிவு நீக்கம்

யாழ்ப்பாணம், மே 15

2017 டிசெம்பர் 31ஆம் திகதி வரை 5 வருடங்களாக வாகன வரி அனுமதிப் பத்திரம் பெறப்படாத வாகனங்கள் பயன்பாட்டில் இல்லாத வாகனங்கள் எனக் கருதி அவை அனைத்தினதும் பதிவுகள் நீக்கப்படும் என வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மக்கள் தமது வாகனத்துக்குக் கடந்த 5 ஆண்டுகளாக வரி அனுமதிப்பத்திரம் பெறவில்லையாயின் உடனடியாக அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் நிலுவையைச் செலுத்தி வரிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

வாகனம் பழுமடைந்த நிலையில் இருக்குமாயின் பிரதேச செயலகத்தில் நிலுவைக் கொடுப்பனைவைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் மாகாண ஆணையாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதிவரை வாகன உரிமையாளர்கள் மேற்சொன்ன எந்த நடவடிக்கையையும் செய்யாதிருப்பின், அந்த வகை வாகனங்களின் பதிவுகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி மோட்டார் வாகனப் பதிவாளரால் நீக்கப்படும் எனவும் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# ஊவா முதல்வருக்கு எதிராக பதுளைப் பெண் அதிபர் மனு

கொழும்பு, மே 15

தான் முழங்காலிடப்பட நிர்ப்பந்திக்கப்பட்டமையால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பதுளை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் பவானி ரகுநாத், உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள் ளார்.

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, சட்டமா அதிபர் உள்ளிட்ட எண்மரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டே இந்த மனுவை நேற்று அவர் தாக்கல் செய்தார்.

முழங்காலிட நிர்ப்பந்திக்கப்பட்ட விடயத்தால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறும் தனக்கு நட்டஈடு வழங்குமாறும் மனுவில் அவர் கோரியுள்ளார்.

நடப்பு கல்வியாண்டுக்காக மாணவி ஒருவரைப் பாடசாலையில் அனுமதிக்குமாறு கோரி 2018ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி முதலமைச்சரும் கல்வியமைச்சருமான சாமர சம்பத் தஸநாயக்கவின் பிரத்தியேகச் செயலாளரினால் ஒரு கடிதம் தனக்கு அனுப்பப்பட்டதாகவும்,

எனினும், அரச சுற்றறிக்கைக்கு அமைய அந்தக் கோரிக்கையைத் தான் செயற்படுத்தவில்லை என்றும் 3ஆம் திகதி தனக்கு இரண்டு தொலைபேசி அழைப்புகள் கிடைத்ததாகவும் அவர் அதில் கூறியுள்ளார்.

ஊவா மாகாண கல்வியமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட அந்த அழைப்புக்கமைய மாகாண சபை அலுவலகத்துக்குத் தான் சென்றதாகவும், அங்கு அவர் இல்லை என்றும், முதலமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்குத் தான் அழைக்கப்பட்டதாகவும் அதிபர் மனுவில் தெரிவித்துள்ளார்.

அங்கு வைத்தே தான் அச்சுறுத்தப்பட்டு முழங்காலிட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ள அவர், கணவரை இழந்துள்ள தான் மூன்று பிள்ளைகளின் தாய் என்றும் இதய நோயாளி என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 3 நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள்

கொழும்பு, மே 15

விவசாய அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் 3 நிறுவனங்களுக்கு விடயத்துக்குப் பொறுப்பாளரான அமைச்சர் மஹிந்த அமரவீரவால் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, உணவு ஊக்குவிப்புச் சபையின் தலைவராகச் சட்டத்தரணி உபாலி மொஹட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக கடமையாற்றியவர்.

அத்துடன், வரையறுக்கப்பட்ட இலங்கை உர நிறுவனத்தின் தலைவரான அமைச்சின் முன்னாள் செயலாளரான அமரநாத் அபேகுணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், கொமர்ஸல் உர நிறுவனத்தின் தலைவராக ஜகத் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர் இதற்கு முன்னர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மற்றும் சீனோர் நிறுவனத்தின் தலைவராககடமையாற்றியிருந்தார். (ஐ)

# ரூபவாஹினிக்கு புதிய தலைவர்



இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக,இனோக்கா சத்யாங்கனி நியமிக்கப்பட்டுள்ளார் என ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர், மங்கள சமரவீரவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. சுயாதீன தொலைக்காட்சிச் சேவை நிறுவனத்தின் தலைவராக, திலக ஜயசுந்தரவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக மொஹமட் சித்திக் பாருக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராக, உமா ராஜமந்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவி ஜயவர்தன தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்குக் கடிதம் அனுப்பியிருந்த நிலையில் இந்த நியமனங்கள் இடம் பெற்றுள்ளன. (ஐ)

# எரிபொருள்கள் விலை அதிகரிப்பு: புத்தளம் மீனவர்கள் போராட்டம்



புத்தளம் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை கடற்றொழிலுக்குச் செல்லாமல் பணிப் பகிஷ்கரிப்புப் போரட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை காரணமாக மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் மண்ணெண்ணெய் விலையைக் குறைக்கக் கோரியே மீனவர்கள் நேற்றுக் கடற்றொழிலுக்குச் செல்லாமல் தமது இயந்திரப் படகுகளைக் கரையோரத்தில் நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில், புத்தளம் மாவட்டத்தின் சிலாபம், ஆராச்சிக்கட்டு, முந்தல், புத்தளம் மற்றும் கல்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் கலந்துகொண்டதுடன் தமது படகுகளில் கறுப்புக் கொடி கட்டி எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியாவில் நான்கு பாலங்கள் மக்கள் பாவனைக்காகத் திறப்பு

வவுனியா, மே 15

வவுனியா வடக்கில் உள்ள 4 பாலங்களை மக்களின் பாவனைக்காக உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

வவுனியா வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட மாறாவிலுப்பை, நெடுங்கேணி, பெரியமடு, பழையவாடி ஆகிய கிராமங்களின் பிரதான வீதிகளில் புதிதாக அமைக்கப்பட்ட 04 பாலங்களே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டன.

மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியுதவில் இந்தப் பாலங்கள் தலா 28 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நிலையில் நேற்று மக்களின் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டன.



இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் ச.தணிகாசலம், மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள், மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், பிரதேச சபையின் செயலாளர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.